
மாலை: 50 மணி:2 பிப்ரவரி 2008 விலை ரூ. 10

# திருக்கோயில்



## ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன்




என்றும் உங்கள் சேவையில்

நல்லி சின்னசாமி செட்டி

பனகல் பார்க், தி. நகர், சென்னை- 17. தொ. பே. : 24344115- 42604567. Fax : (044) 24343062
Email : inquiry@nalli.com Website : www.nalli.com



# திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு 2038 ஸர்வஜித் - மாசி
மாலை: 50 மணி 2 பிப்ரவரி 2008

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே! வணக்கம்!

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் "மாசிக்"
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல் ஆன் ஏறு ஊரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்" - திருமயிலை தேவாரம்

மாசி மாதம் கடலாட்டிற்கு உரிய மாதமாகும். கார்த்திகையில் மலைச்சுனைகளிலும், மார்கழியில் குளங்களிலும், தைமாதம் ஆறுகளிலும், மாசி மாதம் கடலிலும் நீராடி இறைவனை வழிபட புண்ணியம் பெருகி வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும் என்று சமய நூல்கள் கூறுகின்றன. மாசி நீராடுவதைக் குறித்தெழுந்த புராண நூல் "மாகபுராணம்'' ஆகும். திருஞானசம்பந்தர் தேவாரத்துள் மயிலை கபாலீசுவரரின் மாசிமாதக் கடலாட்டு விழா சிறப்பிக்கப்பட்டுள்ளதை மேலே கண்ட பாடலால் அறியலாம். கடல்நீராடலுக்குரிய இம்மாதத்தில் மாசிமகநாளில் இறைவனுடன் கடல் நீராடி அவரை வழிபட்டு அன்பர்கள் கடல் போல் பரந்த செல்வத்தையும், புகழையும் அடைய வாசகப் பெருமக்களை அன்புடன் அழைக்கிறோம்.

"கடல்தனைத் தாவிக் கண்டேன் சீதையை'' என்று மொழிந்த ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானின் நூற்றெட்டு போற்றிகளுடன் இவ்விதழ் தொடங்குகிறது.

கலைஞரின் குறளோவியம் தமிழர்தம் மானம் காக்கும் செயலையும், சொல்வன்மையையும் விளக்குகிறது. வாரியார் சுவாமிகளின் கட்டுரை தமிழர் தம் மானம் போற்றும் பண்பினை எடுத்துக்காட்டுகிறது.

செவ்வேட்பரமனாகிய முருகனின் அருளால் குழந்தைச் செல்வத்தை பெறலாம் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதமாக கோவை சிரவையாதீனம் தவத்திரு குமர குருபரசுவாமிகளின் "கண்ணப்பரைத் தந்த கந்தவேள்'' என்னும் கட்டுரை அமைந்துள்ளது. இது பழந்தமிழரின் சமயப்பண்பாடுகளையும், சேக்கிழாரின் செஞ்சொல் திறத்தையும் விளக்கி நிற்கின்றது. திருமங்கையாழ்வாரின் பொங்கிவரும் தமிழ் நிறைந்த பக்தி வெள்ளத்தை "திருமங்கை ஒரு தமிழ் கங்கை'' எனும் சொல்லோவியமாக கவிமாமணி வேலூர் டாக்டர் ம. நாராயணன் அவர்கள் தீட்டியுள்ளார்.

தொடர்ந்து அப்பரடிகள் போற்றிப்புகழ்ந்த மெய்யடியார்கள் பதின்மரைப் பற்றிய கருத்துக்களை "அப்பரடிகள் அனுபவித்த அடியார்கள்'' எனும் தலைப்பில் புதுச்சேரி தமிழாகரர் திரு.தெ.முருகசாமி அவர்கள் விவரித்துள்ளார்.

உதவி மாணிக்குழி என்று கல்வெட்டுகளிலும் தேவாரத்திலும் போற்றப்பட்ட திருமாணிக்குழி சிவாலயத்தின் வரலாறு, கல்வெட்டுகள், இலக்கியம் ஆகியவற்றினை விளக்கிக்கூறும் கருத்துப் பெட்டகமாக "திரை மூடிய திருமாணிக்குழி சிவாலயம்'' கட்டுரை திகழ்கிறது.

திருமிகு ஏ.எம்.ஆர். அவர்களின் சிறப்புக் கட்டுரையாகத் ''திருமணத்தடைகள் போக்கும் திருப்பாலைவனநாதர்'' கட்டுரை வெளியாகி உள்ளது.

அகிலம் போற்றும் உடையவர், பெரும்புதூர் மாமுனியாம் ஸ்ரீ ராமானுஜரின் வரலாற்றை இனிய தமிழில் "உலகம் உய்ய உதித்த உடையவர்'' என்னும் தலைப்பில் இத்துறையின் செயல் அலுவலர் திரு.பெ. இராமநாதப்பிள்ளை அவர்கள் எழுதிவரும் தொடரும், திருமதி. டாக்டர். சரசுவதி இராமநாதன் அவர்களின் "கந்தர் அனுபூதி'' என்ற தொடரும் இடம் பெற்றுள்ளன. தமிழ் இலக்கியத்தின் ஒரு கூறான "எண்ணலங்காரம்'' என்பதை அடிப்படையாகக் கொண்டு சேத்துப்பட்டு சித்தாந்த இரத்தினம் டாக்டர் திரு. எம்.ஆர். சந்தானம் அவர்களின் "பதிகப் பெருவழியில் எண்ணலங்காரம்'' என்ற கருத்தோவியம் வெளியாகி உள்ளது.

ஆன்மிக சிந்தனையின் முத்துக்களைப்போல் ஒளிரும் கவிஞர் தென்னம்பட்டு ஏகாம்பரம் அவர்களின் உடல் - மனம் - ஆன்மா என்ற சிந்தனை விருந்து நமது உள்ளுணர்வைத் தட்டி எழுப்புகிறது.

இம்மாத ஆலய உலாவாக "கொங்கு நாட்டின் நீதி தேவதை'' என்ற பெயரில் ஆனைமலை அருள்மிகு மாசாணி அம்மனின் ஆலயம் பற்றிய சிறப்புக்கட்டுரை வெளியாகியுள்ளது.

இதழினை அனைவரும் படித்து மகிழ அன்புடன் வேண்டுகிறேன்.

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்

# சொல்வன்மை



சிலம்புச் செல்வத்தைத் தமிழ் உலகிற்கு வழங்கிய இளங்கோவடிகளாரின் அண்ணன் சேரன் செங்குட்டுவன் வீரங்கொழிக்கத் தாயகத்தை ஆண்டு கொண்டிருந்த காலம்! அப்போது வட புலத்து மன்னர்களில் புகழ்மிக்கவர்களின் வரிசையில் கனகன் விஜயன் என இருவர் இருந்தனர். அடக்கமிலாத நா படைத்தவர்கள் அவர்கள். எவரையும் எளிதில் கேலி பேசக் கூடிய இயல்பினர். ஒருநாள் விருந்தொன்றில் கலந்துகொண்டு மதுவெறியில் தள்ளாடினர். அப்போதும் அவர்களின் மமதை வெளிப்படத் தவறவில்லை. விருந்தில் கலந்து கொண்ட மன்னர்கள் சிலர் தமிழகத்து மூவேந்தர்கள் இமயம் வரையில் படையெடுத்து வந்து அவர்தம் ஆட்சி சின்னங்களான புலி, வில், கயல் ஆகியவற்றை மலைகளில் பொறித்துச் சென்றனர் என்ற பழைய செய்திகளைக் கூறினர். அப்போது வெகுண்டெழுந்த கனக விஜயர் இருவரும் தமிழ் மன்னர்களின் வீரத்தை இகழ்ந்துரைத்தனர்.

"சேரனோ, சோழனோ, பாண்டியனோ இமயம் வரையில் சேனையுடன் வந்து செம்மாந்து திரும்பியபோது எம்மைப்போன்ற மன்னர்கள் இங்கே இல்லை போலும், இருந்திருந்தால் அவர்கள் புறமுதுகிட்டு ஓடியிருப்பர்" எனப் பழித்துப் பேசினர்!

இந்தச் செய்தி செங்குட்டுவனின் செவிக்கு எட்டியது! "தமிழ் மன்னர்களைப் பழித்த தருக்கர்களை என் தாள்பணிய வைக்காமல் விடேன்!" எனச் சூளுரைத்துப் போர் முரசு கொட்டினான். வடபுலம் நோக்கி அவன் படை புறப்பட்டது. அமைச்சர் அழும்பில் வேள் அருகிருக்க, வில்லவன் கோதை படை நடத்த - செங்குட்டுவன், தனது துணைவி வேண்மாளிடம் விடைபெற்று வீர வாளேந்திக் கிளம்பிவிட்டான்.

வழியில் பல மன்னர்கள் அவனை வரவேற்றுப் பணிந்தனர். சில மன்னர்கள் அவனுக்குத் துணையாகப் படைகளையும் அனுப்பினர். வடக்கே, குயிலாலுவம் என்ற இடத்தில் கனக விஜயர்களுடன் செங்குட்டுவன் மோதினான். இறுதி வெற்றி சேரன் செங்குட்டுவனுக்குத்தான்! கனக விஜயர்களைக் காணவில்லை. கடைசியாக அவர்களைத் துறவிகள் வேடத்தில் கண்டுபிடித்து செங்குட்டுவன் எதிரே கொண்டு வந்து நிறுத்தினர்.

"கற்பரசி கண்ணகிக்குச் சிலை வடிக்க இமயத்திலே கல் எடுத்து; அதனை இந்த எருதுகளைச் சுமந்துவரச் செய்க!" என ஆணையிட்டான் செங்குட்டுவன்! அவ்வாறே கனகவிஜயர் தலையில் கல் ஏற்பட்டது! அதனைத் தூக்கிக் கொண்டு கால்கடுக்க நடந்தனர் அந்த வாயடக்கமற்ற பிறவிகள்!

அப்போது அமைச்சர் அழும்பில்வேள் சொன்னார்:


"நல்லதும் கெட்டதும் ஒருவன் சொல்கின்ற சொல்லால் வருவதால், சொல்லில் தவறு நேராமல் காத்துக்கொள்ள வேண்டும்" என்று!

அதைத்தான் இந்தக் குறள் விளக்குகிறது.

**"ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்**
**காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு."**

அதிகாரம் - 65, சொல்வன்மை பாடல் - 642

- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களின் குறளோவியம் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்.

# இதழின் உள்ளே...


1. அருள்மிகு அனுமன் 108 போற்றிகள் 4
2. கண்ணப்பரைத்தந்த கந்தவேள் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள் - சிரவையாதீனத் தலைவர், கோவை 6
3. திருமங்கை ஒரு தமிழ் கங்கை... - கவிமாமணி டாக்டர் வேலூர் ம. நாராயணன், எம்.ஏ. பி.எச்.டி., 10
4. அப்பரடிகள் அனுபவித்த அடியார்கள் தமிழாகரர் தெ. முருகசாமி. 14
5. திரை மூடிய திருமாணிக்குழி சிவாலயம் பனையபுரம் அதியமான் 17
6. இந்திய சுற்றுலா வர்த்தக பொருட்காட்சியில் இந்து சமய அறநிலையத்துறை அரங்கு 20
7. திருமணத் தடைகள் போக்கும் திருப்பாலைவனநாதர்! - ஏ.எம்.ஆர். சிறப்புக் கட்டுரை 22
8. மானம் - அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் (நினைவலைகள்) 25
9. உலகம் உய்ய உதித்த உடையவர் பெ. இராமநாதபிள்ளை, 28
10. பதிகப் பெருவழியில் எண்ணலங்காரம் - சித்தாந்த இரத்தினம் டாக்டர் எம்.ஆர். சந்தானம் 30
11. கந்தர் அனுபூதி டாக்டர். சரசுவதி இராமநாதன் 33
12. உடல் - மனம் - ஆன்மா - தென்னம்பட்டு ஏகாம்பரம் 35
13. கொங்குநாட்டின் நீதி தேவதை 37

# அருள்மிகு அனுமன்

## 108 போற்றிகள்




ஓம் அடங்கா தாரை அடக்கினாய் போற்றி
ஓம் அச்சம் இலாத ஐயா போற்றி
ஓம் அசோக வனத்தை அழித்தாய் போற்றி
ஓம் அஞ்சனை தந்த மைந்தா போற்றி
ஓம் அஞ்சில் ஒன்று பெற்றாய் போற்றி
ஓம் அஞ்சில் ஒன்று வைத்தாய் போற்றி
ஓம் அடக்கம் கண் எனக் கொண்டவ போற்றி
ஓம் அடைக்கலம் தந்திடும் அருளே போற்றி
ஓம் அடையா தாரை அடைவிப்பாய் போற்றி
ஓம் அண்டர் நாயகன் தூதே போற்றி
ஓம் அரக்கர்க்கு அசனியாய் அமைந்தாய் போற்றி
ஓம் அரியணை தாங்கிய அரியே போற்றி
ஓம் அருளின் உருவே அழகே போற்றி
ஓம் அர்ச்சுனன் கொடியாய் அமர்ந்தாய் போற்றி
ஓம் அழகு அறிவாகக் கொண்டவா போற்றி
ஓம் அன்பினுக்கு ஒரு வடிவு ஆனாய் போற்றி

ஓம் அன்னைக்குக் கணையாழி தந்தாய் போற்றி
ஓம் ஆசைகள் அணுகா ஞானமே போற்றி
ஓம் ஆதவன் மாணவ அறிஞ போற்றி
ஓம் ஆரா அமுதே அன்பே போற்றி
ஓம் ஆழ்கடல் தாண்டிய அற்புத போற்றி
ஓம் ஆற்றல் உடைய அரசே போற்றி
ஓம் இடர்கள் களையும் ஏந்தலே போற்றி
ஓம் இதயம் இராமன் ஆனாய் போற்றி
ஓம் இரக்கம் உடைய ஏந்தலே போற்றி
ஓம் இராமனைத் தழுவிய இணையிலாய் போற்றி
ஓம் இராம தூதனாய் விளங்கினாய் போற்றி
ஓம் இராம நாமம் இசைத்தாய் போற்றி
ஓம் இராமன் புகழில் பொலிவாய் போற்றி
ஓம் இலங்கா தேவிக்கு இரங்கினாய் போற்றி
ஓம் இலங்கை நகரை எரித்தாய் போற்றி
ஓம் ஈகை உடைய இறையே போற்றி
ஓம் உள்ளுவார் உள்ளத்து உள்ளாய் போற்றி
ஓம் ஊழிதோறும் நிலைத்து வாழ்வாய் போற்றி
ஓம் எரியும் அணுகா ஏந்தலே போற்றி
ஓம் என்றும் இருப்பாய் இளையாய் போற்றி
ஓம் ஏழுலகும் புகழ் எந்தாய் போற்றி
ஓம் ஐயன் அழகில் திளைப்பாய் போற்றி
ஓம் ஒடுக்கிய புலனால் ஓங்கினாய் போற்றி
ஓம் ஒப்பிலாத உத்தம போற்றி
ஓம் ஓங்கும் ஒடுங்கும் உருவோய் போற்றி
ஓம் கதிரைக் காய்ந்து விழுங்கினாய் போற்றி
ஓம் கலைமணி கல்விச் சுடரே போற்றி
ஓம் கவிக்கு நாயக சேவக போற்றி
ஓம் கற்றிடும் கல்விக் கடலே போற்றி
ஓம் காகுத்தனுக்கோர் துணையே போற்றி
ஓம் காலமும் கணக்கும் நீத்தாய் போற்றி
ஓம் காலின் மா மதலையாய் போற்றி
ஓம் காற்றினும் கடிய விரைவினாய் போற்றி
ஓம் கூடாரை வெல்லும் குணனே போற்றி
ஓம் கூடினார்பால் தோற்பாய் போற்றி
ஓம் கோதண்டக்கோன் தனுவே போற்றி
ஓம் கோயில் அமரும் கோவே போற்றி
ஓம் சங்கு சக்கரம் அறிவாய் போற்றி
ஓம் சஞ்சீவி தந்த சால்பினாய் போற்றி
ஓம் சத்தியம் தவறாச் சதுர போற்றி
ஓம் சமபந்தி இராமனிடம் உண்டாய் போற்றி
ஓம் சரணம் அரண்எனத் தருவாய் போற்றி
ஓம் சரணம் உன்னைப் புகுந்தோம் போற்றி
ஓம் சானகியின் துயரைச் சாய்த்தாய் போற்றி
ஓம் சானகியை வியந்து பணிந்தாய் போற்றி
ஓம் சனியிடர் எல்லாம் சாய்ப்பாய் போற்றி
ஓம் சாதுரியப் பார்வை உடையாய் போற்றி
ஓம் சிறிய திருவடிச் செல்வ போற்றி
ஓம் சினமே இல்லாச் செம்மலே போற்றி
ஓம் சீலத்தின் சீருடைச் சீயமே போற்றி
ஓம் சுக்ரீவனுக்குத் துணையே போற்றி
ஓம் சுந்தரன் எனும்பேர் உடையாய் போற்றி
ஓம் சூதுமதி சிறிதும் இல்லாய் போற்றி
ஓம் சொல்லின் செல்வனே சோதியே போற்றி
ஓம் தருணமா மழையே தலைவா போற்றி
ஓம் தானம் நிறையத் தருவாய் போற்றி
ஓம் திறமிகு வரமே தீரமே போற்றி
ஓம் தீயினுக்கும் துணை ஆனாய் போற்றி
ஓம் துயரம் யாவும் தீர்ப்பாய் போற்றி
ஓம் தூதர்கள் தமக்குத் தலைவா போற்றி
ஓம் தூண்டா மணியாம் விளக்கே போற்றி
ஓம் தொண்டுரு உன்னுரு வானாய் போற்றி
ஓம் தோள்தேர் ஏற்றும் தோழா போற்றி
ஓம் நலம்பல புரியும் நாயக போற்றி
ஓம் நாள்கோள் இயக்கும் நாயக போற்றி
ஓம் பதமெலாம் அருளும் பதமே போற்றி
ஓம் பணிவால் உயர்ந்த பதமே போற்றி
ஓம் பணிவிக்கும் நெடுமுதலே போற்றி
ஓம் பரதனின் உயிரைக் காத்தாய் போற்றி
ஓம் பீமனின் முன்னே பிறந்தாய் போற்றி
ஓம் மருந்து மலையைக் கொணர்ந்தாய் போற்றி
ஓம் மாதவம் அனைத்தும் நிறைந்தாய் போற்றி
ஓம் மாருதி பெயருடை மன்னவா போற்றி
ஓம் முக்காலங்களும் உணர்ந்தாய் போற்றி
ஓம் மூலிகையால் நலம் தந்தாய் போற்றி
ஓம் மைந்நாகத்தின் நண்பா போற்றி
ஓம் வடைமாலைக்கு மகிழ்வாய் போற்றி
ஓம் வாய்மைக்கு ஒருவனே வள்ளலே போற்றி
ஓம் வாயுமா மகனே வீரனே போற்றி
ஓம் வாழ வைத்திடும் வரமே போற்றி
ஓம் வாழை வனத்து வளமே போற்றி
ஓம் வித்தும் விளைவும் நீயே போற்றி
ஓம் வித்தைகள் யாவும் நீயே போற்றி
ஓம் வீரருள் வீரனே வேந்தே போற்றி
ஓம் வெண்ணெய்க் காப்பினை விழைவாய் போற்றி
ஓம் வெற்றி உடைய வீரனே போற்றி
ஓம் வேகம் விவேகம் உடையாய் போற்றி
ஓம் வேட்கை முற்றிலும் இலாதவ போற்றி
ஓம் வேண்டுதல் வேண்டாமை இல்லாய் போற்றி
ஓம் வேதமாம் விழுமிய பொருளே போற்றி
ஓம் வேற்றுமை ஏதும் இல்லா போற்றி
ஓம் வையகம் முழுவதும் காப்பாய் போற்றி!

போற்றி! *

# கண்ணப்பரைத் தந்த கந்தவேள்




ஞானமே வடிவாகிய முருகப்பெருமானை இணையற்ற பரம்பொருளாக வழிபடும் நெறி கௌமாரம் ஆகும். ஈசனோடாயினும் ஆசை அறுத்து, வீடும் வேண்டா விறலினர் ஆகிய, அன்பு செலுத்துவதை மட்டுமே பயனாகக் கொள்வது சமய வாழ்க்கையின் மிக உயர்ந்த இலட்சிய நிலை, இது பல கோடியில் ஒருவருக்குக் கூட வாய்ப்பது அரிது.

இறைவழிபாட்டின் தொடக்கநிலை துன்ப நீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையும் எதிர்பார்ப்பதாகத்தான் அமையும் இதுதவிர்க்க முடியாததுமாகும். இதனால்தான் நம் அருளாளர்கள் அனைவரும்,

“மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்
வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவு
இல்லை” - (தேவாரம் 3-24-1)

“வேண்டுவார் வேண்டுவதே ஈவான்
கண்டாய்”
- (தேவாரம் - 6-23-1)

“இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தல்ஆம் இடர் கெடலும் ஆம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயறவு இல்லையே”
- (தேவாரம் 7-34-1)

“குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்வீசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்”
- (நாலாயிரம். பெரி 1-1-9)

“அடியவர் இச்சையில் எவைஎவை
உற்றன
அவைதரு வித்தருள் பெருமாளே”
-(திருப்புகழ் 733)

என அருளிச் செய்துள்ளனர். இதனால் இறைவனிடம் எதையாவது வேண்டி வழிபடுதலைப் பழித்துரைப்பது அறிவுடைமையாகாது.

**- தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்**
**- சிரவையாதீனத் தலைவர், கோவை**

தன் தேவையை இறைவனிடம் வேண்டி நிறைவேற்றிக் கொள்ள முயல்வது ஞானத்தின் முதல்படி என்பது வண்ணச்சரபம் சுவாமிகளின் கருத்து.

> "நாசிச் சரத்தை நடத்தும் கடவுளை
> யாசிக்க ஞானம்என் றுந்தீபற!
> அறியார்கள் மூடர்என் றுந்தீபற!"
> - (பதிக உந்தி 5)

என்பார் அவர். ஒரு பயனை வேண்டி அதற்காகச் செய்யும் வழிபாடு நேர்த்தி, பராய்க்கடன், காமியம் என்று பல பெயர்களால் கூறப்படும். கைம்மாறு (காமியம்) கருதா இறையன்பு நிஷ்காமிய பக்தி ஆகும்.

கலியுக வரதனாம் கந்தக் கடவுள் அடியார்களுக்கு நல்லன எல்லாம் தருபவன். என்றாலும் மகப்பேறு இல்லாதவர்கள் குமாரக் கடவுளை வேண்டினால் நன்மக்களைப் பெற்று மகிழ்வர் என்பது இன்றும் கண்கூடான உண்மை. தனயர்களை வேண்டுவோர் சஷ்டி விரதம் இருந்து பயன்பெறுகின்றனர். இது பற்றி எழுந்ததே சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்னும் முதுமொழி. பாத்திரத்தில் இருந்தால்தான் கரண்டியில் எடுக்க இயலும் என்னும் வெளிறான பொருள் கூறுவதன்று இப்பழமொழி. சஷ்டி திதியில் சண்முகனை நினைந்து நோன்பிருந்தால் கருப்பையில் மகவு தோன்றும் என்பதே இதன் மெய்ப் பொருள்.

கந்தனை வேண்டிக் கான்முளை பெறுதல் என்னும் வழிமுறை தமிழ்நாட்டில் மிகப்பழங்காலந்தொட்டே நடைமுறையில் இருந்து வருகிறது என்பது பெரியபுராணத்தால் உறுதியாகிறது. கண்ணப்பநாயனார் மிகப்பழங்காலத்தில் வாழ்ந்திருந்தவர். அவர் பொத்தப்பி நாட்டு உடுப்பூர் என்னும் பழைய ஊரினர். குறிஞ்சித் திணையைச் சேர்ந்த அவ்வூருக்குத் தலைவன் நாகன் என்பான். அவனுடைய மனைவியின் பெயர் தத்தை.

வேடர்குலத் தலைவனாகிய நாகன் தத்தையோடு திணையொழுக்கம் குன்றாமல் - தன் பிறப்பொழுக்கத்தில் மாறுபடாமல் வாழ்ந்து வந்தான் என்கிறார் சேவையர் காவலர்.

> "பெற்றியால் தவம்முன் செய்தா -
> னாயினும் பிறப்பின் சார்பால்
> குற்றமே குணமா வாழ்வான்;
> கொடுமையே தலைநின் றுள்ளான்;
> விற்றொழில் விறலின் மிக்கான்;
> வெஞ்சின மடங்கல் போல்வான்;
> மற்றவன் குறிச்சி வாழ்க்கை
> மனைவியும் தந்தை என்பாள்"

(பெரிய. கண்ணப்ப. 8)


கண்ணப்பர்

நாகனும் தத்தையும் இல்லற வாழ்க்கையில் நீண்ட நாள் இணைந்திருந்தும் அவர்களுக்கு மக்கட்பேறாம் நன்கலம் வாய்க்கவில்லை. இனிமேல் மக்கட்பேற்றுக்கே வழியில்லை என்னுமளவிற்கு வயது முதிர்ந்துவிட்டதால் அனைவரும் இனி குழந்தை பிறக்காது என்று கூறத் தொடங்கிவிட்டனர். இந்நிலையில் தங்களுக்கு மைந்தன் வேண்டும் என அத்தம்பதியர் ஆசைப்பட்டனர்.

அதனால் நாகனும் தத்தையும் முருகக் கடவுளை வழிபட்டு, மக்கட்பேற்றை வேண்டி, முறைப்படி நோன்பிருந்தனர் என்கிறார் சேக்கிழார் பெருமான்.

பொருவரும் சிறப்பின் மிக்கார்
இவர்க்கினிப் புதல்வற் பேறே,
அரியதென் றெவரும் கூற,
அதற்படு காத லாலே
முருகலா் அலங்கற் செவ்வேல்
முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும்
பராய்க்கடன் நெறியில் நிற்பார்.

(மேலது. 10)

தொண்டர் சீர் பரவுவார் இத் திருவிருத்தத்தில் பராய்க்கடன் நெறியில் நிற்பார் எனக் கூறுவது ஆழ்ந்து நோக்கத்தக்கது. மக்கட்பேறு வேண்டி முருகப் பெருமானை வழிபடுவதற்காகத் தனியான ஒரு நெறிமுறை அக்காலத்திலும் நடைமுறையில் இருந்தது என்பதை இது தெளிவாக்குகிறது. ஆனால் அந்தப் பராய்க்கடன் (விரத பத்ததி) என்ன என்பது இந்த நூலில் விளக்கப்படவில்லை.

வாரணச் சேவ லோடும்
வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச்
சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப்
புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங் காடல் செய்து
பெருவிழா எடுத்த பின்றை

(மேலது. 11)

எனக் கூறப்பட்டுள்ளது பொதுவான குறிஞ்சிநிலக் குமரன் வழிபாடேயன்றிச் சிறப்பான நோன்பு நெறி ஆகாது.

என்பதை

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்
ஆண்டலைக் கொடியொடும் மண்ணி அமைவர
நெய்யோ டையவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறும்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொ டின்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்தி.........
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினார்
வழிபட(ல்)

(திருமுருகாற்றுப்படை 226 - 248)

குறிஞ்சி நிலமக்கள் குமரனை வழிபடும் பொது நெறியேயாதலின் என்க.

திருத்தொண்டர் மாக்கதையின் செய்யுட்கிடக்கையை நுட்பமாக நோக்கினால் நாகனும் தத்தையும் முதலில் முருகப் பெருமானை வேண்டி, மகப்பேற்றுக்காக அதற்கே உரிய சிறப்பு நோன்பில் சில நாள் ஈடுபட்டிருந்தனர் எனப் புலனாகிறது. இதைத்தான் பெரியபுராணத்தில், "நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார்" (10) எனக் குறிப்பிட்டுள்ளது. இந்தச் சிறப்பு நெறியில் பராய்க்கடன் நோன்பை முற்றுவித்த பிறகு வெளிப்படையாக விழா எடுத்து அவர்கள் முருகு ஆற்றுப்படுத்தினர்., (எழுந்தருள் வித்தனர்) என்பதுதான் பெரிய புராணச் செய்தி.

நோன்பும் விழாவும் முடிந்த பின்பு, முப்புரம் எரித்த முதல்வனின் குமாரனாகவும் விளங்குகின்ற முருகப் பெருமானின் திருவருளால் தத்தை கருவுற்றாள். இதை அறிந்த உடனே நாகன் (தான் பராய்க்கடன் நெறியில் நின்று முன்பு வேண்டிக் கொண்டபடி),

"ஊனமில் பலிகள் போக்கி
உறுகடன் வெறியாட் டோடும்"

(பெரிய. கண்ணப்ப. 13)

செலுத்தினான் மகப்பேறு அளித்தால் இன்னது செய்வேன் என முன்னர் வேண்டிக்

கொண்டது குறைவற்ற பலிகள் ஆகிய உறுகடன். இந்தச் சிறப்பு நேர்த்திக்கடனோடு குறிஞ்சிக்குரிய வெறியாடலாகிய பொது வழிபாட்டையும் செய்தான் எனச் சேக்கிழார் பெருமான் தனித்தனியாகப் பிரித்துக் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். எப்போதும் வழக்கமாகச் செய்யப்படுவது வெறியாட்டு என்பதால் தான் அதை ஒடுக்கொடுத்துப் பிரித்துக் காட்டியுள்ளார். இதனால் மகப்பேறு வேண்டி முருகக் கடவுளை நினைந்து நோன்பிருத்தலும் விருப்பம் நிறைவேறிய பிறகு பிரார்த்தனையைச் செலுத்துவதும் மிகத் தொன்மையான வழக்கம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக விளங்குகிறது.

குமரப்பெருமான் அருளினாலே தத்தை கருவுற்றாள் எனக் கூறும் குன்றையர் கோமானின் பாடல் சிந்தைக்கினிய ஓர் இலக்கிய விருந்தாகும். அதனைச் சற்று நோக்குவோம்.

முருகவேள் முப்புரம் எரிசெய்த முதல்வனின் மைந்தர் ஆனவர் என்கிறார் சேக்கிழார். இதனால் தன்னை மைந்தனாகப் பெற்றதால் சிவபிரான் அடைந்த மகிழ்ச்சியை அறிந்துள்ள முருகன் அந்த மகிழ்ச்சியைத் தன்னைச் சரணடைந்துள்ள நாகனுக்கும் அளிக்க முன் வந்தார் என்பது குறிப்பு. முப்புரமாவது மும்மல காரியம் ஆதலின் மலங்களின் வலிமையை அடக்கிய சிவபெருமானுடைய அம்சமான முருகனின் வரத்தால் பிறந்ததால்தான் கண்ணப்பநாயனார் நாளாறினால் கண் இடந்து அப்ப முன்வருமளவு பக்குவம் அடைந்தார் என்பதும் இந்த அடைச் சொற்களின் ஆற்றலால் பெறப்படுகிறது. வரைபக எறிந்த திண்மை சேர் வேலனின் அருளினால் தோன்றியதால் தான் குழந்தை திண்ணனாக இருந்தான் என்பதையும் பெரிய புராணத் திருவிருத்தம் மிக நுட்பமாகப் புலப்படுகிறது.

குமாரக் கடவுளாகத் தோன்றியவர் ஆதலின் பிள்ளை வரம் தந்தார்; மலத்தொடர்பு அற்றவரின் அருளால் பிறந்த மகன் மிக எளிதில் இறைவனின் பேரன்பன் ஆனான்; அவனிடம் வெற்றி வடிவேலனின் திண்மையும் அமைந்தது எனக் குறிப்பால் உணர்த்தும் திருப்பாடல் நவில்தொறும் மிகுகின்ற நூல்நயம் உடையதோர் கவிதை ஆகும்.



"பயில்வடுப் பொலிந்த யாக்கை
வேடர்தம் பதியாம் நாகற்கு
எயிலுடைய புரங்கள் செற்ற
எந்தையார் மைந்த ரான
மயிலுடைக் கொற்ற ஊர்தி
வரைஉரம் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி
அண்ணலார் அருளி னாலே"

"கானவர் குலம்வி ளங்கத்
தத்தைபால் கருப்பம் நீட" (மேலது.
12, 13)

மைந்தரான, திண்மை (கொண்ட) என்னும் பொருள்பொதிந்த இரண்டு அடைச் சொற்களால் இவ்வளவு பொருள்வளத்தைத் தரும் சேக்கிழார் பெருமானின் புலமையாற்றல் போற்றத்தக்கது.

*

# திருமங்கை ஒரு தமிழ் கங்கை...



**த**மிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியங்களுக்குப் பிறகு தமிழை வளர்த்த பெருமை சமய இலக்கியங்களையே சாரும். வைணவ இலக்கியப் பேழையாகத் திகழ்வது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம். பன்னிரண்டு ஆழ்வார்களின் தனித்தமிழ்த் திறத்தைப் பாடல்கள் வழி நின்று அன்றும் - இன்றும் - என்றும் புவிக்குப் பறைசாற்றிக் கொண்டிருப்பது இந்நூல். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் திருமங்கையாழ்வார். நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் பெரும் பான்மையான பாடல்களைப் (1246) பாடியவர் திருமங்கை ஆழ்வார். இவரது வரலாறு - வாழ்க்கைப் பின்னணி இவற்றை ஆராய்வதும் - இவரது பாத்திறனைப் போற்றுவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சோழ மன்னன் ஒருவனின் படைத்தளபதியாக விளங்கியவர் நீலன். அவருடைய மகன் பரகாலன். ஆம்! திருமங்கை ஆழ்வாரின் ஆரம்பகாலப் பெயர் இதுதான். போர்க்களத்தில் பகைவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்வதில் வல்லவர் இவர். இவரது வீரத்தைப் பாராட்டிச் சோழமன்னர் தமது ஆளுகைக்கு உட்பட்டிருந்த 'திருமங்கை' என்ற நாட்டை இவருக்குப் பரிசாக வழங்கி 'குமுதவல்லி' என்பாளை மணம் முடித்து வைக்கின்றான். வாய்த்த மனையாள் குமுதவல்லி. இவரது போர்க்குணம் நிரம்பிய வன்னெஞ்சத்தைப் படிப்படியாக மாற்றித் திருமால் மீது பற்று கொள்ளச் செய்கின்றாள். பரகாலனின் வன்னெஞ்சம் திருமால் அடியவர்களைப் போற்றும் நன்னெஞ்சமாகக் கனிந்து விடுகின்றது. திருவரங்கக் கடவுளையே தமது வழிபடு தெய்வமாகப் போற்றத் தொடங்கும் பரகாலன். அக்கோவிலுக்கு மதிற்சுவர் எழுப்புவதில் பெரும் பொருளைச் செலவழித்து விடுகின்றார். அடியவர்களுக்கும் வாரி வாரி வழங்கி இன்பம் காண்கின்றார். சோழனுக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தையும் செலுத்த மறுக்கிறார்.

காலப் போக்கில், எல்லாவற்றையும் இழந்த நிலையில், திருமால் மீது கொண்ட பற்றுதலை மட்டும் இழக்காதவராகி வறியவராகின்றார். ஆலயத் திருப்பணிகள் தொடரவும், அடியவர்களைப் பரக்கவும் பொருள் வேண்டும்! அதற்குரிய வழியாக இவர் தேர்ந்தெடுத்தது என்ன தெரியுமா? வழிப்பறிக் கொள்ளை...! இது 'ஆகாநெறி' என்று குமுதவல்லி தடுத்தும் கேளாதவராகித் தொடர்ந்து அத்தொழிலில் ஈடுபடுகிறார் பரகாலன்.

ஒருமுறை. ஒரு திருமணக் குழுவை மறித்து இவர் எல்லா நகைகளையும்

- **கவிமாமணி டாக்டர் வேலூர் ம. நாராயணன், எம்.ஏ. பி.எச்.டி.,**

கொள்ளையடித்து சிறு மூட்டையாகக் கட்டித் தூக்கும் பொழுது, தூக்க இயலாமல் திணறுகிறார். வியப்படைந்து நிற்கையில், திருமால் - இலக்குமியுடன் நேரில் தோன்றி இவர்க்கு அருள் பாலிக்கின்றார். அப்பொழுது முதல் ஆழ்வாராக உயர்த்தப் பெறுகிறார். வடவேங்கடம் - தென்குமரி இடையே திகழ்ந்த தமிழகம் முழுவதும் பயணஞ் செய்து திருமால் கோயில்களுக்குச் சென்று திருமாலைப் போற்றித் துதித்துப் பாடிப் பரவுகின்றார். அப்பாடல்களின் தொகுப்பே நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் இடம் பெற்றுப் பொதுவாகத் தமிழர்களுக்கும், சிறப்பாக வைணவத் தமிழர்களுக்கும் சிந்தையில் தேன் பாய்ச்சிய வண்ணமுள்ளன.

"இவருக்கு நீலநிறத்தார், பரகாலன், கலியன், நாலுகவிப் பெருமாள், அருள்மாரி என்று பெயர். இவர் குதிரைக்குப் பெயர் ஆடன்மா..." என்று மேலும் சில தகவல்களைத் தருகின்றது தமிழகராதி அபிதான சிந்தாமணி *(பக் 845)* திருவேடங்கடம், அகோபிலம், திருவள்ளூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கடல் மல்லை,. திருக்கோயிலூர், தில்லைத் திருச்சித்திரக் கூடம், திருவாலி, காஞ்சிபுரம் போன்ற திருத்தலங்களில் திகழும் திருமால் கோயில்கள் இவரால் வாழ்த்திப் பாடப் பெற்றுள்ளன. இத்தகைய வாழ்த்திப் பாடல்களை 'மங்களா சாசனம்' என்று போற்றுகின்றனர் வைணவ மரபினர். இவரது காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டு என்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

திருமங்கை ஆழ்வார் தமது தேன்தமிழ்ப் பாக்களாகப் பெரிய திருமொழி *(1083 பாடல்கள்)* திருக்குறுந்தாண்டகம் *(19)* திருநெடுந்தாண்டகம் *(27)* திருவெழு கூற்றிருக்கை *(1)* சிறிய திருமடல் *(37)* பெரிய திருமடல் *(79)* ஆகியவற்றைப் பாடியுள்ளார். இவற்றுள் கனிந்திருக்கும் தமிழ்ச்சுவை, உவமைகள், அணிநலன்கள், வரலாற்றுக் குறிப்புகள் உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவக்கின்ற வண்ணமாக உள்ளன. சிலவற்றைக் காண்போம்.

நாராயணா என்னும் நாமத்தைத் தாம் பற்றியதற்குரிய காரணத்தைப் பல பாக்களில் விளக்குகிறார் திருமங்கை ஆழ்வார். அவற்றுள் ஒன்று நான் இதுநாள் வரைக்கும் ஒரு கலையையும் கற்கவில்லை. ஐம்புலன்களுக்கும் வீணே அடிமைப்பட்டுக் கிடந்தேன். எப்பொழுதும் போர் வேண்டியே அலைந்து கொண்டிருந்தேன். இப்பொழுது அவற்றையெல்லாம் தவிர்த்தேன். செல்லும் கதிக்கு உய்யும் வழி என்ன என்று ஆராய்ந்து தெளிந்து நாராயணா என்னும் நாமத்தைப் பற்றிக் கொண்டேன் என்கின்றார்.

'கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தை
பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை
பெருநிலத்து ஆருயிர்க் கெல்லாம்
செய்யுமே வேண்டித் திரிதருவேன்
தவிர்ந்தேன்
செய்கதிக்கு உய்யும் ஆறு எண்ணி
நற்றுணை யாகப் பற்றினேன், அடியேன்,
நாராயணா என்னும் நாமம்...!' (955)

'மக்களே...! நீங்கள் வானவர் வாழ்கின்ற வைகுண்டத்தை அரசாள வேண்டுமானால் திருமாலின் ஆயிரம் திருநாமங்களைச் சொல்லுங்கள். இயலவில்லை என்றால் சாளக் கிராமத்தில் திகழும் திருமாலைப் போற்றி நான் பாடியுள்ள இந்தப் பாடலையாவது எப்பொழுதும் சொல்லிக் கொண்டேயிருங்கள்' என்கின்றார் மற்றுமொரு பாடலில் திருமங்கை ஆழ்வார்.

"தாராரும் வயல் சூழ்ந்த
சாளக் கிராமத்து அடிகளை
காராரும் புறவின் மங்கை வேந்தன்
கலியன் ஒலிசெய் தமிழ்மாலை
ஆரார் உலகத்து அறிவுடையார்
அமரர் நன்னாட்டு அரசாளப்
பேராயிரமும் ஓதுமின்கள்:
அன்றி, இவையே பிதற்றுமினே..." (997)

இவர். 'கலியன்' ஒலிசெய் தமிழ் மாலை என்று தமது பெயரைப் பாடல்கள் பலவற்றுள்ளும் பதிவு செய்துள்ளார்.

திருவேங்கடமுடையானைப் போற்றி எண்ணற்ற பாடல்களைப் பாடியுள்ளார் திருமங்கை ஆழ்வார்.

"சேயன், அணியன், சிறியன், பெரியன்
என்பதும் சிலர் பேசக் கேட்டிருந்தே
என்நெஞ்சம் என்பாய்! எனக்கு
ஒன்றும் சொல்லாதே,
வேய்கள் நின்று வெண்முத்தமே சொரி
வேங்கடமலை கோயில் மேவிய
ஆயர் நாயகற்கு இன்று
அடிமைத் தொழில் பூண்டாயே...!"
(1055)

திருவேங்கட மலையில் மூங்கில்கள் காடுகளாக வளர்ந்து வெண்முத்துகளைச் சொரிந்து கொண்டிருக்கின்றன என்பதும் வேங்கடவனை 'ஆயர் நாயகன்' என்பதும் நயஞ் செறிந்த தொடர்களாகும்.

சென்னைத் திருவல்லிக்கேணி பார்த்தசாரதிக் கோயில் மூலவர் திருமங்கையாழ்வாருக்கு எங்ஙனமெல்லாம் தோற்றமளிக்கின்றார் தெரியுமா? வேதமாக - வேதத்தின் சுவைப்பயனாக முனிவர் விழுங்கும் இனிய கனியாக - நந்த

கோபருக்கு இனியவராக - தம்மை அடிமைகொள்ளும் அப்பராகத் தோற்றமளிக்கின்றாராம்.

“வேதத்தை, வேதத்தின் சுவைப் பயனை
விழுமிய முனிவரர் விழுங்கும்
கோதில் இன்கனியை, நந்தனார் களிற்றை
குவலயத்தோர் தொழுதேத்தும்
ஆதியை, அமுதை, என்னையா ளுடை
அப்பனை: ஒப்பவர் இல்லா
மாதர்கள் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே...”
(1069)

திருமாலிடத்துக் காதல் கொள்கிறாள் தலைமகள்: இது கண்டு அவளுடைய தாய் வருந்திப் பாடுகிறாள்: இங்கு தாயாக மாறித் திருமங்கை ஆழ்வார் பாடும் பாடல்கள் ஏராளம். அவை அள்ளித் தரும் தமிழ்ச் சுவையோ தாராளம். சான்றுக்கு ஒன்று.

“கண்ணன் என்றும், வானவர்கள்
காதலித்து மலர்கள் தூவும்
எண்ணன் என்றும், இன்பன் என்றும்
ஏழ் உலகுக்கு ஆதி என்றும்
திண்ண மாடம் நீடு நாங்கைத்
தேவதேவன் என்றுஎன்று ஓதி
பண்ணின் அன்னமென் மொழியாள்
பார்த்தன் பள்ளி பாடுவாளே...!” (1326)

திருமங்கை ஆழ்வாரின் உள்ளங் கவர்ந்தவர் திருவரங்கம் மேவிய திருமால்: அவரை இவர் பல்லாற்றானும் பாடிப் பரவியுள்ளார்: திருவரங்கத் திருமால் எத்தகையவராம்...!

‘பொய்வண்ணம் மனத்து அகற்றி
புலன்ஐந்தும் செல வைத்து
மெய்வண்ணம் நினைந்த வர்க்கு
மெய்ந்நின்ற வித்தகனை
மைவண்ணம் கருமுகில்போல் திகழ்
வண்ணம், மரகதத்தின்
அவ்வண்ண வண்ணனையான்
கண்டது தென்அரங்கத்தே...’ (1406)

பொய்யான உலக ஆசைகளை அகற்றி, ஐம்புலன்களை அவித்து, மெய்யாகவே நினைப்பவர்க்குத் தன் சிறப்பியல்புகளைக் காட்டுகின்றவனாம் திருவரங்கத் திருமால் என்கின்றார்.

இவ்வாறு பெரிய திருமொழி 1083 பாடல்களும் இனிய தமிழ்த் தேன்துளிகளாகத் திகழ்வதைக் கற்போர் உணர்வர். இனி இவரது திருக்குறுந் தாண்டகம் குழைத்துத் தரும் தமிழமுதைச் சுவைப்போம்.

திருமாலைப் புயல்வண்ணன் என்று பாராட்டும் திருமங்கை ஆழ்வார் தமது உள்ளம் பழுக்கக் காய்ச்சிய இரும்பு போல் கனன்றுள்ளது. திருமாலின் அருள் என்னும் நீர் விழுந்தால் உடனே ஈர்த்துக் கொள்ளும் என்கின்றார். திருமாலின் அருள் கரும்பின் இனிய சாறு போன்று பருகுவதற்கு இனிமையாக உள்ளது என்கின்றார். பக்தியின் உச்ச நிலையில்தான் இத்தகைய உணர்வுகளும் உவமைகளும் தோன்றும்.

“இரும்பு அனன்று உண்டநீர்போல், எம்
பெருமானுக்கு என்றன்
அரும்பெறல் அன்பு புக்கிட்டு, அடிமைபூண்டு
உய்ந்து போனேன்
வரும் புயல் வண்ணனாரை மருவி
என்மனத்து வைத்த
கரும்பின் இன்சாறு போலப்
பருகினேற்கு இனியவாறே...! (2036)

தொடர்ந்து, திருமங்கை ஆழ்வாரின் திருநெடுந்தாண்டகம் என்னும் தமிழ்ச் சோலைக்கு வருவோம். சிறிது நேரம் இங்கே இளைப்பாறுவோம். இங்கே ஆழ்வார் நற்றாயாக மாறித் தம்மகள் திருமால்மீது கொண்ட காதலால் வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகளை சொல்லோவியமாக்கிக் காட்டுகின்றார்.


பட்டு உடுக்கும்; அயர்த்து இரங்கும்: பாவை
பேணாள்: பனி நெடுங்கண் நீர் ததும்பப்
பள்ளி கொள்ளாள்:
என்துணைப் போது என் குடங்கால்
இருக்க கில்லாள்: எம்பெருமான்
திருவரங்கம் எங்கே? என்னும்: (2062)

சங்க இலக்கியங்களில் வரும் நற்றாய் இரங்கலுக்கு இணையாக இப்பாடல்கள் திகழ்கின்றன.

திவ்விய பிரபந்தத்தில் திருமங்கை ஆழ்வாரின் திரு எழு கூற்றிருக்கை என்னும் தனிப்பாடல் ஒருதனி இலக்கியமாகவே போற்றப்படுகின்றது. திருமாலுக் குரிய ஏழுவகைப் பண்புகளை அழகுற நிரல்படுத்தி இவர் பாடியிருக்கும் திறன் புதிய இலக்கிய உத்தியாகும்.

“திருமாலே! நீ எழு உலகங்களையும் தந்தத்தில் கொண்டு விளங்கினாய். மாந்தர் விரும்பும் அறுசுவைப் பயனுமானாய். திருக்கைகளிலே ஐந்து வகையான படைகளை ஏந்தியுள்ளாய். உன் அழகே ஒருவடிவாம். நான்கு தோள்கள் உனக்கு. திருமேனி நிறமோ முந்நீர் வண்ணம். நீ அறிதுயில் துயில்கையில் உனது இரண்டு திருவடிகளைப் பிடிப்பவர்கள் மலர் மகளும் நிலமகளும் ஆவர். இந்த ஏழுவகையான கூற்றிற்கும் இருக்கையாகத் திருமால் திகழ்வதால், இந்தப் பாடலுக்காக ‘திரு எழு கூற்றிருக்கை’ எனப் பெயர் அமைவதாயிற்று:

‘ஏழ் உலகு எயிற்றினில் கொண்டனை: கூறிய



பல்வேறு பண்புகளையெல்லாம் போற்றிப் பாராட்டி விட்டு, அத்தகைய சிறப்புகளுக்குரிய திருமாலாகிய என் காதலன் எனக்குக் கிடைக்கவில்லை எனில் ஊரார் தூற்றுதலையும் பொருட்படுத்தாமலும் மடலூர்வேன் என்கின்றார்.

ஒரு மன்னர் ஊர்வலம் வருகையில், எழுவகைப் பெண்டிரும் அவன்மேல் காதல் கொண்டு தவிப்பதை 'உலா' இலக்கியங்களாகவே படைத்துக் காட்டினர் பிற்காலப் புலவர்கள். இது தமிழ் தமிழர் மரபிற்கு மாறானது என்று உணர்ந்த நிலையில் காலப் போக்கில் 'உலா' பாடுதலை விட்டொழித்தனர்.

திருமால் தமது பல அவதாரங்களிலும் நிகழ்த்தியவற்றைப் பாராட்டியும், வாசவதத்தை காதல் மிகுதியால் வத்சராயன் பின்னால் நாணம் துறந்து சென்றதையும் தமது சிறிய மடலில் பதிவு செய்துள்ள திருமங்கை ஆழ்வார் நிறைவாக இவ்வாறு பாடுகின்றார்:

**'பேராயிரமும் பிதற்றிப் பெருந்தெருவே**
**ஊரார் இகழிலும், ஊராது ஒழியேன் நான்**
**வாரார் பூம் பெண்ணை மடல்...' (2710)**

இதே போன்று தமது பெரிய திருமடல் எனும் நெடும் பாடலில். நாக கன்னிகை அர்ச்சுனனைத் தொடர்ந்து சென்று வளர்ந்து காதலித்ததையும் திருமங்கை ஆழ்வார் பாடியுள்ளார். திருமால் பால் கொண்ட காதல் மிகுதியால் நாயகி என்னவெல்லாம் செய்வாளாம் தெரியுமா?

'நுண் இடைப் பெண்டிர்கள் வாழும் தெருக்களிலும், மறையவர் வாழும் இடங்களிலும், அவன் அடியார்கள் முன்பும் வேந்தர் கூட்டத்தும் நாடு முழுவதும் தன் வடிவு காட்டி எனக்குக் காதலை மிகுவித்து அவன் செய்தனவும், என் நிலைமையையும் அறிவிப்பேன்...!' என்கின்றாள். தமது பெரிய திருமடலை இவ்வாறு நிறைவு செய்கின்றார் திருமங்கை ஆழ்வார்.

**'உன்னி உலவா: உலகு அறிய ஊர்வன் நான்**
**முன்னி முளைத்து எழுந்து ஓங்கி ஒளி பரந்த**
**மன்னிய பூம் பெண்ணை மடல்...' (2740)**

மென்மை என்பதே கொஞ்சமும் அறியாத போர்ப் படைத் தளபதியாக விளங்கிய பரகாலன் பின்னாளில் மென்மையே உருவான திருமாலடியவராக உருமாறிக் காலத்தால் அழியாத பாடல்களைத் தந்திருக்கின்றார். திருமங்கை நாட்டின் மன்னன் திருமங்கை ஆழ்வார் எனும் நிலைக்கு உயர்ந்து தாம் என்றென்றும் வற்றாத தமிழ் கங்கை என்பதை தமது பாடல்கள் வழி மெய்ப்பித்துக் கொண்டு 'இருக்கின்றார்...!'

✦

**அறுசுவைப் பயனும் ஆயினை: சுடர்விடும்**
**ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை: சுந்தர**
**நால் தோள் முந்நீர் வண்ண! நின் ஈரடி**
**ஒன்றிய மனத்தால் ஒருமதி முகத்து**
**மங்கையர் இருவரும் மலர்அன அங்கையில்**
**முப்பொழுதும் வருட, அறிதுயில்**
**அமர்ந்தனை...!'**

**(2672)**

சங்க காலத்தில் ஒரு மரபு இருந்தது. விரும்பிய காதலி கிடைக்கவில்லை எனில், காதலன் பச்சைப் பனை மடலொன்றில் அமர்ந்து, ஊரார் பழித்தாலும் கேளாமல், தம் காதலி வாழும் தெருவழியே, ஊர்வலம் வருவானாம்: இதற்கு மடலேறுதல் என்ற பெயர். ஆனால், தம் காதலன்பால் கடலளவு காதல் இருந்தாலும் காதலி இவ்வாறு 'மடலேறுதல்' என்பது அந்நாளில் இல்லை என்பார் வள்ளுவர்.

**'கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்**
**பெண்மை பெருந்தக்க தில்'**

என்பது வள்ளுவர் வரைந்து காட்டும் விதி.

சங்க காலத்தை அடுத்துவந்த சமய இலக்கியக் காலத்தில் இந்த மரபினில் மாறியும் வந்துவிட்டது. ஆம்! இது வடமொழி இலக்கியங்கள் தமிழகத்தில் நுழைந்துவிட்டமையால் ஏற்பட்ட மாற்றம் அல்லது தாக்கம் என்றும் கொள்ளலாம். தலைவி தலைவனை நேருக்கு நேர் பார்க்கவும் வெட்கப்பட்ட காலம் சங்க காலம்: அதனால்தான் வள்ளுவரும்,

**'யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்**
**தான்நோக்கி மெல்ல நகும்'**

என்றார். ஆனால், இடைக்காலத்தில் நிலைமை முற்றிலும் வேறாகி விட்டது. இங்கே திருமங்கை ஆழ்வாரும் அதைத்தான் சிறிய திருமடல் - பெரிய திருமடல் மூலம் பதிவு செய்துள்ளார். நாயக - நாயகி பாவத்தில் திருமாலை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் கருதித் திருமாலின்

# அப்பரடிகள் அனுபவித்த அடியார்கள்

**நா**ன்கு, ஐந்து, ஆறு திருமுறைகளுக்குச் சொந்தக்காரரான அப்பரடிகள் தாம் வாழும் காலத்திலும் அதற்கு முன்பும் வாழ்ந்த சில அடியார்களைத் தம் தேவாரப்பாடலில் போற்றியுள்ளார். அவர்கள், 1. அப்பூதியடிகள், 2. திருஞானசம்பந்தர், 3. அமர்நீதி நாயனார், 4. கண்ணப்பர், 5. சண்டேசுரர், 6. கணம்புல்லர், 7. நமிநந்தியடிகள், 8. சாக்கிய நாயனர், 9. எறிபத்தர், 10. கோச்செங்கட்சோழர் என்னும் பத்துப் பேராவர்.

இப்பதின்மருள் அப்பூதியும் ஞானசம்பந்தரும் அப்பரடிகள் காலத்தில் வாழ்ந்தவர்கள். ஏனைய எண்மரும் அப்பரடிகள் காலத்திற்கு முந்தி வாழ்ந்தவர்கள். பொதுவாக அப்பரின் சமகாலத்திலும் முந்தியும் இன்னும் பல பேரிருக்க குறிப்பிட்ட சிலரை மட்டும் அவர் போற்றி அனுபவித்த சிறப்பைச் சிந்திப்பதே இக்கட்டுரைத் தொடரின் கருதுகோளாகும்.

மேற்குறித்த பத்துப்பேரையும் கீழ்க்கண்டவாறு தனித்தனியாகப் பகுத்தறியலாம். 1. அப்பூதியும் அமர்நீதியும் திருநாமம் கூறி முத்திப் பேறடைந்தவர்கள். ஆண்டவன் நாமத்தைப் போல் திருநாவுக்கரசு என்ற அடியவர் நாமத்தைச் சொன்னவர் அப்பூதி. நமச்சிவாய என ஆண்டவன் திருநாமங்கூறியவர் அமர்நீதி. 2. விளக்கெரித்தலால் பேறு பெற்றவர்கள் கணம்புல்லரும் நமிநந்தியும் ஆவர். தன்னை இழந்த நிலையில் கணம்புல்லர் விளக்கெரித்தார். தண்ணீரால் விளக்கெரித்தவர் நமிநந்தி, 3. சாக்கியரும் கண்ணப்பரும் சிவலிங்க ஆராதனை செய்தவர்கள், கல்லெறிந்து அருச்சித்தவர் சாக்கியர், கண்களை அர்ப்பணித்து வழிபட்டவர் கண்ணப்பர். 4. பக்திக்கு பின்தான் பாசம் என்பதை எறிபத்தரும் சண்டேசுரரும் காட்டியவர்கள். சிவத்தொண்டுக்கு இடையூறு செய்வோர் எவரேயாயினும் தண்டித்தவர் எறிபத்தர், தன் சிவபூஜைக்கு இடையூறாயிருந்தவர் தந்தை எனத் தெரிந்தும் காலை வெட்டியவர் சண்டேசுரர், 5. திருஞானசம்பந்தரும் கோச்செங்கணாரும் சிவாலயத் தொண்டால் பெருமை பெற்றார்கள். சிவ அடியார் கூட்டத்துடன் சிவாலயந்தோறும் சென்று கூட்டு வழிபாட்டையும் அற்புதங்களையும் செய்தவர் சம்பந்தர், எழுபதுக்கும் மேற்பட்ட சிவாலயங்கட்டி மக்கள் வழிபாட்டிற்கு உதவியவர் கோச் செங்கணார்.



திருஞானசம்பந்தர்

இவ்வாறாகப் பதின்மரையும் இரண்டிரண்டாகச் சேர்த்துப் பார்த்தாலும் வேறு வகையில் இவர்களைப் பிரித்து ஒன்று சேர்த்துப் பார்க்கலாம். 1. இல்லறம் இல்லாத பிள்ளை நிலையில் சிவத்தொண்டிற்கு ஆளாவர்கள் கண்ணப்பரும் கண்டேசுரரும் ஆவர். ஏனையோரை இல்லறத்திருந்து தொண்டு செய்தவர்கள் எனலாம். இப்படி ஒற்றுமை வகையிலும் வேற்றுமை வகையிலும் இப்பத்துப்பேரும் அப்பரடிகள் நெஞ்சில் குடிகொண்டாலும் அவர்களது தனிப்பட்ட வாழ்வு அடிகளின் வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது என்பதுதான் ஈண்டு உணரத்தக்க உண்மையாகும். அந்த அடிப்படையில் அவர் தம் சமகாலத்தவர்களான அப்பூதியையும் சம்பந்தரையும் பற்றி முதலில் அறிவோமாக!

வஞ்சித் தென் வளைகவர்ந்தான்
வாரானே ஆயிடினும்
பஞ்சின்கால் சிறகன்னம்
பரந்தார்க்கும் பழனத்தான்
ஆஞ்சிப்போய்க் கலிமெலிய
அழலோம்பும் ஆப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற
சேவடியாய் கோடுஇயையே!

நான்காம் திருமுறையில் அமைந்த இப்பாடலால் அப்பரடிகள் அப்பூதியை அகப்பொருள் நிலையில்

---

தமிழாகரர்
தெ.முருகசாமி, புதுச்சேரி - 9

அனுபவிக்கிறார் எனத் தெரிகிறது. ஆண்டவனது திருநாமத்திற்கு இணையானது அடியவரது திருநாமம் என்பதை அப்பூதி நாயனார் வரலாற்றைக் கற்போர் அறிவர். ஆனால் அப்பரடிகளைப் பொறுத்தமட்டில் தன் நாமத்தைச் சொன்னதால் அப்பூதியை அவர் விரும்பவில்லை என்பது இப்பாடல் உணர்த்தும் உண்மையாகும். தன்பெயருக்கான விளம்பரமாக அது அமைந்து விடும் என்பதால் அதனைத் தவிர்த்தவகையில் அப்பூதியாரின் பொது நலத்தையும் சிவபெருமான்மீது கொண்ட பூசைப் பயனையும் அப்பரடிகள் நினைவு கூறுவதன் மூலம் அவரை அவர் அனுபவித்தார் எனலாம்.

உலகம், துன்பமின்றி வாழ வேள்வி செய்தவர் அப்பூதி என்பதை "அஞ்சிப்போய் கலிமெலிய அழல் ஓம்பும்" என்ற தொடர் விளக்குகிறது. தான் வாழ விரும்பாமல் உலகம் வாழ, அதிலும் கலி (துன்பம்) மெலிந்து வாழ விரும்பிச் செய்த வேள்வித் தொண்டு, அப்பர் உள்ளத்தைக் கவர்ந்துள்ளது. இப்பொது நலத் தொண்டு என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற தன் கொள்கைக்கு ஒத்ததாக இருந்ததுகண்டு போற்றினார் எனலாம். இதனால் உலகில் கலி அஞ்சிப்போய் மெலியச் செய்யும் தொண்டிற்கு அப்பூதி சான்றாகக் காட்டப்பட்டார் என்பதே ஈண்டு உணரத்தகும் உண்மையாகும். இங்ஙனம் தொண்டு செய்தால் உரிய பயன் கிட்டும் என்பதை உணர்த்தவே அப்பரடிகள் "அப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடி" எனச் சிவனது திருவடியைப் போற்றுவதன் மூலம் அப்பூதியை அனுபவிக்கின்றார்.

இறைவன் திருவடியில் பூத்தூவி வழிபடுவது உலகியல். அத்திருவடி அப்பூதியின் தலையில் சூடப்பட்டும் பூவாக அமைகிறது. இதனால் ஆண்டவன் திருவடிக்குள்ள பெருமையினும் அப்பூதி திருமுடிக்குள்ள பெருமை அதிகம் எனத் தெரிகிறது. கூற்றுவன் வருமுன் தனக்குத் திருவடி தீட்சை வேண்டுமென விண்ணப்பித்த அப்பருக்கு நல்லூரில் அப்போது கிட்டுகிறது. இதனை "நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார், நல்லூரெம் பெருமானார் நல்லவாறே" என அப்பரே கூறுகிறார்.

சத்திமுற்றத்தில் விண்ணப்பித்த 'பூவார் அடிச்சுவடென்மேல் பொறித்து வை' என்ற விண்ணப்பம், நல்லூரில் சிவபெருமான் அப்பரின் சென்னிமிசை பாதமலர் சூட்டினான் என்ற அனுபவத்தால் நிறைவேறியது. இந்நிகழ்வுக்குப் பிறகே அப்பர் திங்களூரில் அப்பூதியைச் சந்திக்கிறார். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம் என்பார்போலத் திருநாவுக்கரசர் தான் திருவடி பெற்ற அனுபவத்தை அப்பூதியோடு இணைத்து இன்புறுகிறார். ஈண்டு அப்பூதியின் தலையில் இவனது திருவடி இருந்ததாகக் கூறும் அப்பர் வாக்கைப் போல் சேக்கிழார் கூறவில்லையானாலும் சேக்கிழாருக்கு முந்தியது அப்பர் வாக்கு என்பதால் அப்பூதியின் பொதுநலத் தொண்டாகச் செய்த வேள்விப் பூசையின் பயனே திருவடி தீட்சை என்ற உண்மையை நேரில் கண்ட பதிவாக ஆவணப் பத்தவே அப்பர் "அப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடி" என்றார் எனலாம்.

இங்ஙனம் பொது நலத்தாலும் அப்பொது நலப் பயனால் திருவடி பெற்ற சிறப்பும் கொண்ட அப்பூதியை 'வஞ்சித்தேன்' என்ற பாடலால் அப்பர் நேரிடையாக அனுபவிக்காமல் மறைமுகமாக அனுபவிக்கும் சிறப்புத்தான் இப்பாடலில் உள்ள அகப்பொருள் நுட்பமாகும்.

பிரிந்துள்ள தலைவன் விரைவில் தன்னை வந்து கூடுவானா? எனத் தலைவி முன்னதாக அறிந்து இன்புற முயற்சிக்கும் வண்ணமாக அமைந்தது இப்பாடல். கண்களை மூடிக் கொண்டு தரையில் உள்ள மணலில் தன் கை விரலால் வட்டமிட்டுப் பார்க்கும்போது தொடங்கிய இடத்தில் சரியாகக் கோடு சேர்ந்துவிடுமானால் தலைவன் விரைந்து வருவான் என நம்புவது ஓர் சகுனம் பார்க்கும் முறையாகும். அந்த வகையில், அப்பூதியின் திருமுடிக்குப் (குஞ்சி) பூவாய் நின்ற சேவடியை உடைய இறைவனே (சேவடியாய்) நான் இடும் கோட்டினைச் சரியாக இணையுமாறு அருள்க (கோடு இயையே) எனக் கூறுவதன்மூலம் சிவபெருமானை அடையத் துடிக்கும் தலைவியாக அப்பரடிகள் தம்மைப் பாவித்துக் கூறுவதுதான் 'வஞ்சித்தேன்' என்ற பாடலின் அகப்பொருள் செய்தியாகும்.



அப்பூதியடிகள்

தலைவனை அடையத்துடிக்கும் தலைவி, அவனை எண்ணியெண்ணி ஏங்குவதால் உடல்மெலியும். உடல் சோர்வதால் கைவளையல்கள் கைகளில் தங்காமல் கழன்று விழும். இப்படியாகச் செய்த தலைவன்தான் திருப்பழனத்தில் உள்ள சிவனாவான் என்கிறது அப்பர் பாட்டு. இப்படியாகச் சிவபெருமானை இப்பாடல் அனுபவித்தாலும் அவ் அனுபவம் அப்பூதி வாயிலாக அனுபவிக்கப் படுவதுதான் இப்பாடலில் உள்ள இரகசியமாகும். சீனியை இனிப்புப் பொருளாக நேரிடையாக அனுபவிப்பதினும் அதை மாவுப் பொருள்கள்

பலவற்றுடன் சேர்த்து இனிப்புப் பண்டமாக (லட்டு, ஜாங்கிரி) அனுபவிக்கும்போது உள்ள இன்ப அனுபவச்சுவை போன்றதே ஈண்டுச் சிவபெருமானை அப்பூதி வழி அனுபவிக்கும் அனுபவமாகும். இதனால் அப்பூதியின்றிச் சிவனைத் தனித்து அனுபவிக்க முடியாதென்ற உண்மையைப் பறைசாற்றுகிறது அப்பரது பாடல் எனலாம். மேலும் திருநாவுக்கரசு என்ற நாமம் சொல்லியே அப்பரை அனுபவித்த அப்பூதியை விட, பொது நலத்தாலும் சிவனது திருவடி பெற்ற சிறப்பிலும் உயர்ந்த அப்பூதியை அனுபவித்த அப்பரின் அனுபவத்திற்கு ஈடு இணை இல்லை என்றே உணரலாம்.

அப்பூதியைப் போலத் தம் சமகாலத்தில் வாழ்ந்த திருஞானசம்பந்தரை அப்பர், நாலாந்திரு முறையிலும் ஐந்தாம் திருமுறையிலும் மூன்று பாடல்களால் அனுபவித்தார். திருவாவடுதுறை இறைவனிடம் சம்பந்தர் தம் தந்தையின் பொருட்டு ஆயிரம் பொன் பெற்ற வரலாற்றுக் குறிப்பை நாலாந்திருமுறையில் நாவுக்கரசர்,

மாயிரு ஞால மெல்லாம்
மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப்
படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல வூரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னாரே!

எனப் பதிவு செய்து போற்றுகிறார். இதில் ஞானசம்பந்தரைக் கழுமல ஊரர் எனச் சிறப்பிக்கிறார். அப்பர், திருநெறிய தமிழால் ஆன்மாக்களின் மலங்களைக் கழுவச் செய்த பெருமை பற்றிச் சம்பந்தரைக் கழுமல ஊரர் என்று அனுபவித்தார் போலும்!

அடுத்து திருவீழிமிழலையிலும் திருமறைக்காட்டிலும் சம்பந்தருடன் இருந்த அனுபவத்தை இருபாடலால் கூறி இன்புறுகிறார். இவை திருவாய்மூரில் பாடியவை.

பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பார் அவரைப்போல்
தேடிக் கொண்டு திருவாய்மூர்க் கேயெனா
ஓடிப் போந்திங்கு ஒளித்தவா றென் கொலோ!

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக் கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே!

வேதங்களால் அடைக்கப்பட்ட திருமறைக் காட்டுத் திருக்கோயில் கதவினைத் தமிழ்ப்பாவால் திறக்கப்பாடினார் அப்பர். பின்னர் யாது காரணத்தாலோ பழைய நிலையில் அடைக்கப் பாடினார் சம்பந்தர். இந்நிகழ்வுகளுக்குப் பின்னர் அன்றிரவு இறைவன் நாவுக்கரசர் கனவில் தோன்றி 'திருவாய்மூர் வா' எனக் கூறி எழுப்பியதால் இறைவன் பின் சென்ற அப்பருக்குச் சற்று தூரத்தில் இறைக் காட்சி மறைந்துவிட்டது. இதனால் வருந்தியவர் 'திருவீழி மிழலையில் சம்பந்தருக்கு வாசியுடன் கூடிய காசினைத் தந்து பின்னர் வாசி தீர்ந்த காசினைத் தந்தது போல, ஈண்டு காட்சி தந்து மறைந்தவர் பின்னர் காட்சி தருவார் போலும்' எனத் தமக்குள் ஆறுதல் கொள்வதான சூழலில் ஐந்தாந் திருமுறையில் மேற்படியான பாடல்கள் உள்ளன.

திருமறைக்காட்டில் பலபாடல்கள் பாடிக் கதவினைத் திறக்கச் செய்தார் அப்பர். ஆனால் கதவை அடைக்கச் செய்ய சம்பந்தரின் ஒரு பாடல் போதுமானதாக இருந்தது. இவ்வுண்மையையே அப்பர் **"என்னினும் உறைப்புப் பாடி அடைப்பித்தார்"** என்றார்.

உறைப்பு என்பது ஞானசம்பந்தரின் உறைப்பான திருத்தொண்டை உணர்த்துவதாகும். சிவத்தொண்டில் இருவரது தொண்டும் உறைப்பானாலும் தம் தொண்டினும் சம்பந்தர் தொண்டு மேலானது என்பதைச் சிறப்பிக்கவே "என்னினும்" எனக் கூறினார் அப்பர். மகன்மை முறையில் ஞானப்பாலுண்ட சிறப்பிற்குரியவர் சம்பந்தர் என்பதைக் குறிப்பாகக் கூறி அனுபவிக்கவே இவ்வாறு கூறினார் எனலாம். இவ்விரு பாடலிலும் சம்பந்தரை உரிய பெயரால் கூறாமல் "அவரை" என்றும் "உந்நின்றார்" என்னும் உரிமையால் சுட்டியது சிந்திக்கத்தக்கதாகும்.

திருமறைக்காட்டு நிகழ்ச்சிக்குப் பின்னர் அப்பரது கனவில் தோன்றியவாறு இறைவன் தன் தோற்றத்தைக் காட்டிக் கொண்டு முன் செல்ல, அவர் பின் திருநாவுக்கரசரும் அவர் பின் சம்பந்தரும் செல்கின்றனர்.

திடீரென இறைக் காட்சி மறைய அப்பர், "தனக்குக் காட்டாவிட்டாலும் சம்பந்தருக்குக் காட்டாமல் இருப்பாரோ" எனக் கூறுவது ஞானசம்பந்தருடன் கொண்ட உறவையும் உரிமையையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

'தொண்டால் பெறும் காசு' என அப்பரின் வாசில்லாக் காசு பெற்றதைப் பாராட்டிய அளவில் 'வாசி தீரவே காசு நல்குவீர்' என அப்பரை நினைந்து பாடிய சம்பந்தரை அப்பர் திருவாய்மூர்த் தேவாரத்தில் இருவேறு நிலைகளில் நினைந்து அனுபவிப்பது சிறப்பாக உள்ளது.

படிக்காசு பெறுவதில் ஏக்கமுற்ற சம்பந்தருக்கு மீண்டும் திருக்காட்சி நல்காமல் ஏக்கமுறச் செய்ததை ஆண்டவன் தவிர்க்க வேண்டும் எனச் சம்பந்தரின் பிள்ளைத் தன்மையை இறைவனுக்கு நினைவூட்டும் விதமாகவே ஐந்தாம் திருமுறையின் இருபாடல்களும் அமைந்துள்ளன. எனவே அப்பரைச் சம்பந்தர், அனுபவித்ததினும் சம்பந்தரை அப்பர் அனுபவித்ததே மேலானது என்பது உறுதியாகிறது✱

# திரை மூடிய திருமாணிகுழி சிவாலயம்!

**தோ**ன்றிய காலம் அறிய முடியாத திருக்கோயில் - சுயம்பு நாதர் - எப்போதும் திரை மூடிய நிலையில் மூலவர் வீற்றிருக்கும் அபூர்வ ஆலயம் - பள்ளியறை இல்லாத திருக்கோயில் - வாமன அவதார கொலைப்பழி தீர திருமால் வழிபட்ட தலம் - பீம ருத்திரர் காவல் செய்யும் திருக்கோயில் - தேவாரப் பாடல் பெற்ற நடுநாட்டுத் தலம் - சேக்கிழார் வழிபட்ட ஆலயம் - திருப்புகழ் பெருமை கொண்ட தலம் - அடியார் தனஞ்செயனை கொள்ளையரிடம் இருந்து காத்தருளிய இறைவன் - சோழன், பாண்டியன், விஜயநகர மன்னன் என பலராலும் திருப்பணி செய்யப்பட்ட திருத்தலம் - திருஞானசம்பந்தர் பெயரில் மடம் நிறுவி சோழமன்னன் நிலக்கொடை பெற்ற திருத்தலம் - திருவண்ணாமலையை ஒத்த தலம் - கெடிலம் நதியோரம் எழுந்துள்ள திருக்கோயில் என பெருமைகள் பல கொண்ட திருத்தலமாகத் திகழ்வது, கடலூர் மாவட்டம் திருமாணிகுழி சிவாலயம் ஆகும்.

**புராண வரலாறு**

திருமால் தன்னுடைய தசாவதாரங்களில் ஒன்றான வாமன அவதாரத்தில், பிரம்மச்சாரியாக நின்று மாவலி மன்னனிடம் மூன்று அடி மண்கேட்டு உலகை அளக்க முயன்றார். அதன் வாயிலாக மாவலி



மன்னனை அழித்தார் என்பது அனைவரும் அறிந்த புராணக் கதை. சிறந்த வகையில் அந்த கொலைப்பழி தீர, திருமாணிகுழி வாழும் சிவனிடம் வந்து, சிவவழிபாடு செய்தார். இதனால் இறைவனுக்கு வாமனபுரீசுவரன் என்ற பெயர் வழங்கலானது. இத்தலமும் திருமாணிகுழி என்று அழைக்கப்பட்டது. மாணி என்பதற்கு பிரம்மச்சாரி என்று பொருள்.

**"நித்தநிய மத்தொழில ணாகிநெடுமால்**
**குறளனாகி மிகவும்**
**சித்தம் தொருக்கிவழி பாடுசெய் நின்ற**
**சிவலோகனிடமாம்,"**

என்ற திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல் வரிகள் மூலமாக திருமால் பிரம்மச்சாரியாக வழிபட்டதை அறிய முடிகின்றது.

**"போர் வலித்தோள் மாவலிதன் மங்கல**
**வேள்வியற்**
**பண்டு வாமனனாய் மண்ணிரந்த செங்கணவன்**
**வழிபட்ட**
**திருமாணி குழியடைந்தார்,"**

என சேக்கிழார் தனது பெரியபுராணத்தில் இந்த ஐதீகத்தினை குறிப்பிட்டுள்ளார்.

**ஐதீக சிற்பம்**

இலக்கியங்கள் இந்த ஐதீகத்தினை குறிப்பிட்டாலும், கல்வெட்டுகளில் இது குறித்து தகவல் இல்லை என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

என்றாலும், இந்த ஐதீகத்திற்கு சான்றாக கருவறை மண்டப முன்புறத்தில் காணப்படும் புடைப்புச் சிற்பம் விளங்குகிறது.

சிவன் சந்நதியில் அணையும் நிலையில் உள்ள விளக்கினை ஒரு எலி தூண்டிவிடுவது, திருமாலின் அருளால் அந்த எலி, பிற்காலத்தில் மாவலி சக்ரவர்த்தியாக தோன்றுவது, திருமால் வாமன அவதாரம் எடுத்து மூன்றடி மண் கேட்பது, உலகளந்தப் பெருமாளாக காட்சி தந்து, மாவலி மன்னனை அழிப்பது, இப்பழி தீர சிவனை வழிபடுவது என அனைத்து சம்பவங்களும் நம் கண்முன்னே காட்சி தருகின்றது.

**கல்வெட்டில் திருமாணிகுழி**

இவ்வாலயத்தில் கல்வெட்டுகள் நிறைந்து காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் சோழன், பாண்டியன் மற்றும் விஜயநகர மன்னன் காலத்தவை. முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் ராஜராஜன், மூன்றாம் மாறவர்ம விக்கிரம பாண்டியன் என கி.பி. 1104 முதல் கி.பி. 1389 வரையிலான கல்வெட்டுகள் மொத்தம் 22



கல்வெட்டுகள் கி.பி. 1902 ஆய்வில் கண்டறியப்பட்டு உள்ளன.

இக்கல்வெட்டுகள் மூலம் திருக்கோயிலுக்கு வழங்கப்பட்ட கொடைகள், மன்னர்கள் விதித்திருந்த வரிகள் போன்ற விபரங்களை அறிய முடிகின்றது.

**ஸ்ரீகாழி நாடுடையப்பிள்ளை திருமடம்**

திருமாணிகுழி திருக்கோயிலுக்கு அருகே திருஞானசம்பந்தரின் பெயரால் ஸ்ரீகாழி நாடுடையப்பிள்ளை திருமடம் ஒன்று இருந்ததை அறிய முடிகிறது. இதற்கு முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1119) நிலக்கொடை வழங்கிய செய்தியும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இதேபோல, மூன்றாம் குலோத்துங்கனின் படைத் தலைவனாக அதியமான் என்ற பெயரில் ஒருவன் வாழ்ந்ததும், முப்பது கழஞ்சு எடைகொண்ட மேகலையொன்றைத் திருக்கோயிலுக்கு வழங்கிய செய்தியும் தெரிய வருகிறது.

**உதவித் திருமாணிகுழி**

சோழர் காலத்தில், விருதராஜ பயங்கர வளநாட்டு மேற்கா நாட்டு உதவி திருமாணிகுழி என இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது. நாளடைவில் உதவி மறைந்து திருமாணிகுழி மட்டுமே நிலைத்துவிட்டது. உதவிக்கும் ஒரு புராணக்கதை உண்டு.

**உதவி நாயகன்**

வடநாட்டில் உள்ள கௌட தேசத்து கப்பல் வணிகன் தனஞ்செயன். சிவபக்தனான இவன், சிவாலய பயணம் மேற்கொண்டு, பல்வேறு சிவாலயங்களையும் வழிபட்டு வந்தான்.

அதன் தொடர்ச்சியாக திருமாணிகுழி திருக் கோயிலை நெருங்கியபோது கொள்ளையர்கள் இவனை வழிமறித்து கொள்ளையடிக்க முயன்றனர். ஆனால் சிவபக்தனான தனஞ்செயன் திருமாணிகுழி இறைவனை வேண்டிநிற்க, அடுத்த நொடியில் கள்வர்களை விரட்டியடித்து தனஞ்செயனுக்கு உதவி செய்தார்.

இதன் காரணமாக, அவன் திருமாணிகுழி இறைவனின் ஆலயத்தைத் திருப்பணி செய்ததாக கூறப்படுகிறது. இந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்தும் வகையிலேயே இறைவனுக்கு உதவி நாயகன் என்ற பெயர் ஏற்பட்டது.

**திரை மூடிய மூலவர்**

பொதுவாக, ஆலயங்கள் திறந்திருக்கும் நேரத்தில் கருவறையும் திறந்திருப்பது எல்லா கோயில்களிலும் காணப்படுவது வழக்கம். ஆனால், திருமாணிகுழி இறைவன் கருவறையோ, எந்த நேரமும் திரையிட்டு மூடப்பட்டு இருக்கும். தீபாரதனை நடக்கும் சில நொடிகள் மட்டுமே நாம் இறைவனை தரிசிக்க முடியும். இதற்கு இரண்டு ஐதீகங்கள் கூறப்படுகின்றது.

வாமன அவதாரத்து கொலைப்பழி தீர, திருமால் சிவ வழிபாடு செய்யும்போது, அசுரர்களால் இடையூறு ஏற்படாமல் பாதுகாப்பு வழங்க, சிவபெருமானையும், திருமாலையும் பாதுகாத்து காவல் புரிபவர் பீம ருத்திரர்.

இதேபோல, மற்றொரு ஐதீகமும் கூறப்படுகிறது. மூலவர் கருவறையில் இறைவனும், இறைவியும் எப்போதுமே ஐக்கிய நிலையில் இருப்பதாக நம்பப்படுகிறது. இந்த தனிமைக்கு இடையூறு வராமல் காத்திட திரையிட்டு பீம ருத்திரர் காவல் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த காரணத்தினால், இக்கோயிலில் பள்ளியறை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**திருவண்ணாமலை ஒத்த தலம்**

திருவண்ணாமலை திருக்கோயிலின் பின்னால் மலையிருப்பது அறிந்ததே. ஆனால் திருமாணி குழியில் இராஜகோபுரத்தின் எதிர்ப்புறம் சிறிய மலையும் அதன் உச்சியில் தீபமேடையும் உள்ளன.

இம்மலை ஜோதிகிரி, ரத்தினகிரி, ருத்ரகிரி, புஷ்பகிரி, சஞ்சீவ கிரி என ஐங்கிரிகளை கொண்டது.

இம்மலையில் திருவண்ணாமலை மகாதீபத்தின் மறுநாள் ரோகிணியில் தீபத்திருவிழா நடைபெறுகிறது.

**நடுநாட்டுத்தலம்**

இத்தலம் நடுநாட்டில் உள்ள 17வது தலமாக திகழ்கின்றது. இத்தலத்தினை மூவர் பாடியதாக கூறப்பட்டாலும், திருஞானசம்பந்தரின் பாடல்கள் மட்டுமே நமக்கு கிடைத்துள்ளன. பெரியபுராணம் வாயிலாக திருநாவுக்கரசரும், சுந்தரரும் இத்தலத்திற்கு வருகைபுரிந்ததை அறிய முடிகின்றது.

**அருணகிரிநாதர்**

இத்தலத்து ஆறுமுகப்பெருமானை அருணகிரிநாதர் வழிபட்டுள்ளார்.

**..... குளத்தி லூறிய தேனூறல் மாதுகள்**
**குடித்து லாவிய சேலோடு மாணிகொள்**
**குழிக்குள் மேவிய வானோர்களே தொழு**
**தம்பிரானே...**

என்கிறார் அருணகிரிநாதர் தனது திருப்புகழில்.

திரிசிபுரம் மீனாட்சி சுந்தரனாரும் இத்தலத்தினை பாடியுள்ளார்.

**ஆலய அமைப்பு**

கிழக்கு நோக்கிய ஐந்து நிலை இராஜகோபுரத்தினை கடந்து உள்ளே நுழைந்ததும், கொடிமரம், பலிபீடம், நந்தி இவற்றைக் கடந்து சுவாமி சந்நிதியை அடைகிறோம்.

அலங்கார மண்டபம், மகாமண்டபம், அர்த்த மண்டபம் கடந்தபின் சதுர வடிவ கருவறைக்குள் உதவிமாணிகுழி ஆளுடையார் எளிய வடிவில் சுயம்பு நாதராய் காட்சி தருகின்றார். திரை மூடிய சிவன் இவரே. திரைச்சீலையில் பீம ருத்ரர் உருவம் இடம்பெற்றுள்ளது.

அர்த்த மண்டபத்து வாயிலின் இருபுறமும் சோழர்காலத்து வாயிற்காப்போரின் இரண்டு சிற்பங்கள் வெவ்வேறு வகையான தோற்றத்தில் சிறந்த வேலைப்பாடுடன் அழகுறக் காட்சி தருகின்றன. அர்த்த மண்டபத்தின் எதிரே உள்ள மகாமண்டபத்தினை நான்கு உருண்டைத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இதன் சுவர்களில் ஆறு தேவகோட்டங்கள் உள்ளன. தெற்கே கணபதி, வடக்கே மகிஷாசுரன் இல்லாத துர்க்கை அமைந்துள்ளன. இது துவாரபாலகியின் பழைய சிற்பம் என கூறுவோரும் உண்டு.



கருவறை சுவர்களில் உள்ள கோட்டங்களில் தெற்கே தட்சிணாமூர்த்தி, மேற்கே லிங்கோத்பவர், வடக்கே பிரம்மாவும் காட்சி தருகின்றனர்.

கொடுங்கையின் மேல் யாளி வரிமானமும், கீழே பூதகண வரிசையும் உள்ளன. கட்டடக்கலை பிற்கால சோழர் காலத்தை நினைவுபடுத்துகின்றது.


இறைவனின் வேறுபெயர்கள், வாமனபுரீசுவரன், மாணிக்க வரதன், திருமாணிக்குழி மகாதேவன், உதவித் திருமாணிக்குழி ஆளுடையார், வார் செறி உதவி நாயகர், திருமாணிகுழி நாயனார், என்பன.

வலம் வரும்போது விநாயகர் சந்நிதியும், அதனை அடுத்து சுவாமி கருவறையின் பின்புறம் அருணகிரிநாதர் பாடிய ஆறுமுகப்பெருமான் சந்நிதியும் அமைந்துள்ளன. இதன் அருகே தலவிருட்சமான பழமையான கொன்றை மரம் காட்சி தருகின்றது. இதனை வலம் வந்தால் வருவது திருக்காமக் கோட்டம்.

**திருக்காமக் கோட்டம்**

இத்திருக்கோயிலில் வெளிப்பிராகார வடமேற்கு மூலையில் கிழக்கு முகமாக அம்மனுக்கென தனி கோயில் உள்ளது. இதனைத் 'திருக்காம கோட்டமுடைய நாச்சியார்' என குலோத்துங்க சோழனின் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.


இறைவியின் வேறு பெயர்கள் உதவி நாயகி, மாணிக்கவல்லி, அம்புஜாட்சி என்பன.






**அமைவிடம்**

இத்திருத்தலம் கடலூர் - பண்ருட்டி பேருந்து வழித்தடத்தில் அமைந்துள்ளது. கெடிலம் ஆற்றைக் கடந்ததும் திருக்கோயில் வந்துவிடும். இவ்வூர் வழியே கடலூர் மற்றும் பண்ருட்டியில் இருந்து நிறைய பேருந்துகள் செல்கின்றன. திருமாணிகுழி வெகு அருகே 108 திவ்ய தேசங்களுள் ஒன்றான திருவந்திபுரமும், பண்ருட்டி அருகே தேவாரப்பாடல் பெற்றதும், திருநாவுக்கரசர் உழவாரப்பணி துவக்கியதுமான திருவதிகைத் திருத்தலமும் அமைந்துள்ளன ✱

**படங்களும் படைப்பும் : பனையபுரம் அதியமான்**















# இந்திய சுற்றுலா பொருட்காட்சியி


## காண்போம்! கண்டுகள




1. மகளிர் முன்னேற்றத்தின் முன்னோடிகள். 2. கண்
காட்சி தந்த சிவபெருமான். 4. ஸ்ரீ ராமானுஜர் திருக்
திருமந்திரத்தை உபதேசித்தல். 5. வாடிய பயிரைக்
பால் அன்பு செலுத்திய வடலூர் இராமலிங்க சுவா
அருள்மிகு முருகன் மற்றும் வலம் வரும் தங்க ரதம்.
10. சிதம்பரத்தில் தேவாரத் திருமுறையினைக் கண்
சிவ பூசை செய்து வழிபடும் யானையும், சிலந்தியு
13. அறங்காவலர் குழுக் கூட்டம், சைவ, வைணவ
14. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய
அரங்கத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள தங்கரதம்,
உடன் அறநிலையத்துறை செயலாளர் திரு.ஜி.சந்
மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,













# ட்காட்சியில் அறநிலையத்துறை அரங்கு


## ண்டுகளிப்போம்!

**வாரீர்! வாரீர்!!**

னாடிகள். **2.** கண்ணப்ப நாயனார். **3.** நந்தியை விலக்கி நந்தனாருக்கு
மானுஜர் திருக்கோஷ்டியூரில் ஓம் நமோ நாராயணாய என்ற
டிய பயிரைக் கடபோதெல்லாம் வாடினேன் என உயிர்களின்
ராமலிங்க சுவாமிகள். **6.** பழநி மலைத் தோற்றம். **7. & 8.** வடபழனி
ரும் தங்க ரதம். திருவண்ணாமலையின் தோற்றம்
றயினைக் கண்டுத்தல் **11.** திருவானைக் கோயிலில்
யும், சிலந்தியும். பரமனின் பாணன் (திருப்பாணாழ்வார்)
சவ, வைணவ அசகர் பயிற்சிப் பள்ளித் தோற்றங்கள்.
ம் அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள்,
ள தங்கரதம், திதேர் மற்றும் தெப்பத்தினை இயக்கி வைத்தல்.
ர் திரு.ஜி.சந்தான இ.ஆ.ப., மற்றும் சிறப்பு ஆணையர்
டி, இ.ஆ.ப., ஆணையர்.











# திருமணத் தடைகள் போக்கும் திருப்பாலைவனநாதர்!

திருக்கயிலைநாதனான ஸ்ரீ சர்வேஸ்வரன் இப்பூவுலகிலுள்ள எல்லாப் பொருட்களின் வடிவமாகவும் அவற்றோடு ஒன்றாகக் கலந்தும் அவற்றைக் கடந்தும் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றான். தன்னை நாடி வந்து நாள்தோறும் பக்தியோடு பூசிக்கும் அடியவர்களின் திருவுள்ளத்திலும், அவர்கள் மனமுருகி வழிபாடு செய்யும் சிறப்புவாய்ந்த திருத்தலங்களிலும், அவர்கள் பொருட்டு எழுந்தருளி அருள்மழை பொழிகிறான் எம்பெருமான். அன்பினால் அகம் குழைந்து அவன் பொற்பாதக் கமலங்களில் சரணடைந்து வணங்கும் பக்தர்களைத் தானே தேடிச் சென்று வேண்டும் வரங்களை வழங்குவான் அந்தப் பரமேஸ்வரன்.

**“நஞ்சு உண்ணப் பொலிந்த மிடற்றினார் உள்ளம் உருகில் உடனாவார்”** என்று பாடிப் பரவசப்பட்டுள்ளார் ஞானசம்பந்தப் பெருமான். இவ்வாறு தன்னைத் தேடிவந்து துதிப்பவர்களின் துன்பங்களைக் களைவதற்காக இறைவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அரிய திருத்தலம் பொன்னேரிக்கு அருகில் “திருப்பாலைவனம்” என்னும் தலத்தில் உள்ள ஸ்ரீலோகாம்பிகை சமேத ஸ்ரீ பாலீஸ்வரர் திருக்கோயிலாகும்.





**தலத்தின் சிறப்பு**

தேவர்களும், அசுரர்களும் மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் நாகத்தைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலை அமுதம் வேண்டிக் கடைந்தனர். அப்போது முதலில் வெளிப்பட்ட நஞ்சைத் தனது திருக்கழுத்தில் அடக்கி இவ்வுலக உயிர்களைக் காத்தருளியதால் ‘நஞ்சுண்ட கண்டன்’ என்ற பெயர் பெற்றார் உமையொரு பாகன். அதன்பின்பு தோன்றிய அமுதத்தினைக் கடத்தில் (குடத்தில்) அடைத்து வைத்துவிட்டு நீராடச் சென்ற தேவர்கள் திரும்பி வந்து அதனை எடுக்க முயன்றனர். அப்போது குடத்தில் இருந்த அமுதத்தின் ஒரு பகுதி பாதாளம் வரை ஊடுருவி இருப்பதையும், மேற்பரப்பில் இருந்த அமுதம் இறுகி கெட்டியாக மாறி லிங்க வடிவமாக இருப்பதையும் கண்ட தேவர்கள், அந்த மூர்த்திக்கு ஸ்ரீ அமிர்த லிங்கம் என்றும் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் என்றும் பெயரிட்டுப் பூஜித்து வந்தனர். சிறப்புவாய்த்ந இத்தலமே தற்போது ‘திருக்கடையூர்’ என்ற பெயருடன் பூஜிக்கப்பட்டு வருகின்றது.

குடத்திலிருந்த அமுதத்தைச் சரிபாதியாக ஏற்று உண்டு நன்மை பெற வேண்டுமென அசுரர்கள் தேவர்களை வற்புறுத்தினர். ஆனால் அசுரர்கள் உண்டால் ஆபத்து என்பதை அறிந்து தேவர்கள், அந்த அமுதத்தை அசுரர்கள் அறியாத வண்ணம் எடுத்துக்கொண்டு மறைவான இடம் தேடி வந்தனர். இறைவனுக்குப் பூஜை செய்த பின்னரே அமுதத்தை உண்ண வேண்டும் என்று கருதிய தேவர்கள், தங்கள்

கையில் இருந்த அமுதத்தின் ஒரு பகுதியைச் சிறிய லிங்கமாகப் பிரதிஷ்டை செய்து வழிபாடுகள் நடத்தினர். தேவர்கள் அமுதத்தை லிங்க வடிவில் பிரதிஷ்டை செய்து வணங்கிய இடமே "திருப்பாலைவனம்" என்ற திருத்தலமாகும்.

**சோழ மன்னனுக்கு தரிசனம்!**

முதலாம் ராஜேந்திர சோழன் தனது பெரும்படையுடன் வடதிசை சென்று வெற்றி வாகை சூடி கங்கை நீரைக் கொண்டு வருகையில் இத்திருப்பாலைவனத்தில் தனது பரிவாரங்களுடன் பாசறை அமைத்துத் தங்கியிருந்தான். இரவு நேரத்தில் அருகிலிருந்த ஒரு பாலை மரத்தில் அரசனது பட்டத்து யானையையும், குதிரையையும் அவனது வீரர்கள் கட்டி வைத்திருந்தனர். பொழுது புலர்ந்ததும் பாலை மரத்தில் கட்டப்பட்டிருந்த பட்டத்து யானையும், குதிரையும் இறைவனின் சூட்சுமத்தால் மயங்கி வீழ்ந்திருந்தன. இதனை அறியாத மன்னன் அதிர்ச்சியடைந்து, காரணத்தை அறிய தனது படை வீரர்களைக் கொண்டு பாலை மரத்தை வெட்டிப் பரிசோதிக்க கட்டளையிட்டான். வீரர்கள் பாலை மரத்தைக் கோடரி கொண்டு வெட்டும்போது முதலில் பாலும், பின்னர் ரத்தமும் பீறிட்டது. இதைக் கண்டு திகைத்த மன்னன், பாலை மரத்தைப் பக்குவமாக அகழ்ந்து எடுக்க ஆணையிட்டான். அச்சமயம் பொன்னார் மேனியனின் வெண்ணிற லிங்க வடிவம் மரத்தின் வேர்ப்பகுதியில் காட்சி தரக் கண்டு, நடந்த தவறுக்கு மன்னித்தருளுமாறு கண்ணீர் மல்கி ஈசனிடம் மன்றாடினான் மன்னன். அவனது வேண்டுதலுக்குச் செவிசாய்த்த இறைவன், தனக்கு இத்தலத்தில் திருக்கோயில் அமைத்து வழிபாடுகள் மேற்கொள்ள திருவுள்ளம் ஆணையிட, மன்னனும் ஸ்ரீ பாலீஸ்வரர் என்ற திருநாமத்துடன் திருக்கோயில் அமைத்து வழிபாடுகள் நடத்தி மகிழ்ந்தான்.

**திருக்கோயில் அமைப்பு!**

தெற்கு நோக்கிய நுழைவாயிலையுடைய உட்கோயிலில் முதலில் கண்ணுக்கு விருந்தாக அமைந்துள்ளது ஆடவல்லானின் அம்பலக் கோயில் ஆகும். முகமண்டபம், அர்த்தமண்டபம், கருவறைகளோடு கூடிய அழகிய திருச்சந்நிதியில் இறைவன் ஸ்ரீ பாலீஸ்வரர் பெருமானைக் கண் குளிரக் கண்டு தரிசிக்கலாம். செவிக்கினிய செந்தமிழாய், நாவிற்கினிய பழச்சுவையாய், கண்ணிற்கு இனிய கருவிழியாய்ப் புலன்களுக்கு மட்டுமின்றி மனத்திலுள்ள அஞ்ஞான அருளை நீக்கும் அறிவொளியாய்க் கருவறையில் அமைக்கப்பட்ட ருத்ராட்ச மண்டபத்தில் அருட்காட்சித் தருகின்றார் எம்பெருமான். இறைவனின் கருவறை 'கஜபிருஷ்டம்' என்ற யானையின் முதுகு போன்ற அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஈசனின் திருச்சந்நிதியைப் போன்றே ஸ்ரீலோகாம்பிகையின் சந்நிதியும் முகமண்டபம், அர்த்தமண்டபம், கருவறைகளோடு அமையப்பெற்று, இறைவனின் வலப்பக்கத்தில் திருமணக்கோலத்தில் காட்சி தருகின்றாள் அம்பிகை. இதனால் இத்திருக்கோயிலில் சஷ்டியப்தபூர்த்தி மற்றும் சதாபிஷேக நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தி வைக்கப்படுகின்றன. லோகநாயகி, பிரியா நாச்சியார், உலக மாதேவி என்னும் பல திருநாமங்களில் வணங்கப்படுகிறாள் உமையவள். இறைவனுக்கும் அம்பிகைக்கும் நடுவில் தனிச்சந்நிதியில் ஆறுமுகப் பெருமான், இந்திர மயிலின் மீது அமர்ந்து தனது தேவியர் இருவருடன் அற்புதக் காட்சி தருகின்றார்.

திருக்கோயிலின் வெளிப்பகுதியில் ராஜகோபுரத்தின் எதிரில் அமைக்கப்பட்டுள்ள 16 தூண்களையுடைய ஊஞ்சல் மண்டபத்தில் திருக்கோயிலின் தலபுராணத்தை விளக்கும் நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடிய எழிலார்ந்த சிற்பங்கள் கண்ணிற்குக் கவின்மிகு விருந்தாக அமையப் பெற்றுள்ளன.

**இறைவனின் திருநாமங்கள்**

தேவர்கள் அமுதத்தின் ஒரு பகுதியை எடுத்து அதில் லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வணங்கியதால் ஸ்ரீ அமிர்தேஸ்வரர் என்றும், பாலை மரத்திலிருந்து வெளிப்பட்டு சோழ மன்னனுக்குத் தரிசனமளித்ததால் ஸ்ரீ பாலீஸ்வரர் என்றும், திருத்தலம் அமையப் பெற்ற இடம் பாலை மரங்கள் அடர்ந்த பகுதி என்பதால் ஸ்ரீ பாலைவனநாதர் என்றும் பல திருநாமங்களில் அழைக்கப்படுகின்றார் ஈசன். அமுதத்தால் ஆன ஈசன் என்பதால், இறைவனின் திருமேனிக்கு வெப்பத் தன்மையில்லாத பால், தயிர், இளநீர், பன்னீர், தேன் ஆகியவற்றால் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகின்றது.

**அமிர்த புஷ்கரணி!**

'பாலைமரம்' தலவிருட்சமாக அமையப்பெற்ற இத்தலத்தின் தீர்த்தம், 'அமிர்தபுஷ்கரணி' என்று அழைக்கப்படும் சக்தி வாய்ந்த தீர்த்தமாகும். அமுதம் அருந்திய தேவர்கள், தங்களது திருக்கரங்களை இத்தீர்த்தத்தில் சுத்தம் செய்து கொண்டனர். அமுதம் பதிந்த கைகளை தேவர்கள் இக்குளத்தில் கழுவியதால் அமுதம் கலந்த நீரை அருந்துவதற்காக அசுரர்கள் தவளை உருவம் தாங்கி குளத்திற்குள் செல்ல முயன்றனர். இதனைத் தங்களின் சூட்சும சக்தியினால் அறிந்த தேவர்கள், தவளை போன்ற



ஜீவராசிகள் இத்திருக்குளத்தில் நுழையக்கூடாது எனச் சாபமிட்டனர். இதனால் திருக்குளத்தில் இன்றளவும் தவளைகள் வாழ்வதில்லை என்பது உண்மை.

**புராதனப் பெருமை!**

திருக்கோயிலின் பழைமையைப் பறைசாற்றும் 71 கல்வெட்டுகள் இங்கு உள்ளன. தமிழ், தெலுங்கு, வடமொழி, கன்னடம் ஆகிய நான்கு மொழிகளிலும் கல்வெட்டுகள் காணப்படுவது இத்திருக்கோயிலின் பெருமைகள் பல பகுதிகளிலும் பரவிப் போற்றப் பட்டுள்ளதை அறிய முடிகின்றது. சோழர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள் மற்றும் விஜயநகரப் பேரரசர்களால் இத்திருக் கோயிலுக்குத் திருப்பணிகள் நடத்தி வைக்கப்பட்டு நன்கொடையாக நிலமும், தீபம் ஏற்றுவதற்குப் பொற்காசுகளும் அளிக்கப்பட்டுள்ளன.

**திருவிழாக்கள்!**

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் திருக்கோயிலில் சிறப்புப் பூஜைகளும், திருக்கோயில் வலமும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. மேலும் பிரதோஷ வழிபாடு ஏற்பட்டதற்கான நிகழ்வோடு இத்தலபுராணம் தொடர்பு கொண்டிருப்பதால், பிரதோஷ காலத்தில் வழிபாடுகள் செய்பவர்கள் அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்கப் பெறுவர். ஆடிமாதம் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் அன்னை ஸ்ரீ லோகாம்பிகைக்குச் சிறப்புப் பூஜைகள் செய்யப்பட்டு சுமங்கலிப் பெண்களுக்கு மாங்கல்யமும், மஞ்சளும் பிரசாதமாக வழங்கப்பட்டு வருகின்றன. ஆண்டு தோறும் பங்குனி உத்திர நாளில் தெப்போற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது.

**பரிகார ஸ்தலம்!**

அகத்திய மகரிஷியும் மார்க்கண்டேய முனிவரும் இத்தலத்து இறைவனை வழிபட்டு இன்புற்றிருக்கிறார்கள். நாகதோஷத்தின் காரணமாக, திருமணத் தடைகள் ஏற்பட்டு மணமாகாமல் உள்ளவர்களும், புத்திரபாக்கியம் ஏற்படாமல் இருப்பவர்களும், நரம்பு சம்பந்தமான உடல் உபாதை உள்ளவர்களும் இத்தலத்தில் நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்தால் தோஷம் நீங்கப் பெற்று நல்ல மணவாழ்க்கையையும், மழலைச் செல்வங்களையும் உடல்நலமும் பெற்று மகிழ்வார்கள். பரம்பரை நோய்களால் பீடிக்கப்பட்டவர்களும், எல்லா வகையான செல்வங்களைப் பெற்றிருந்தும் வாழ்க்கையில் நிம்மதியிழந்து தவிப்பவர்களும் இத்தலத்தில் 'ஏகாதச ருத்ர ஜபம்' நடத்தி இறைவனுக்குத் தேனபிஷேகம் செய்து அந்தத் தீர்த்தத்தை அருந்தினால், உடல்நலிவு நீங்கப் பெற்று நிறைவான வாழ்க்கை அமையப் பெறுவார்கள்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று சிறப்புகளும் ஒருங்கே அமையப்பெற்று நம் பாரத நாட்டின் பழம்பெருமையையும் கலாசாரத்தையும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது இத்திருக்கோயில்.

தமிழக அரசின் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இத்திருக்கோயில், பையூர் கோட்ட வேளாள மரபினரால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. திருப்பணிக்கு உதவ விரும்பும் அன்பர்கள், நன்கொடைகளை காசோலை / வரைவோலை டிடி / மணியார்டர் மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி பெருமானின் திருவருளைப் பெறலாம்.

The Executive Office, Arulmigu Paleeswarar Thirukkoil, Thiruppalaivanam, Ponneri T.K., Thiruvallur Dt. Pin. 601 205 Phone : 044-27978667, 9283421730


**திருத்தலம் செல்லும் வழி**

சென்னையிலிருந்து பழவேற்காடு செல்லும் சாலையில் பொன்னேரிக்கு அருகில் 10 கி.மீ தொலைவில் உள்ளது இத்திருத்தலம். மின்சார ரயில் மூலமாகவும் பொன்னேரிக்குச் சென்று, அங்கிருந்து பேருந்து மூலமாக திருப்பாலைவனம் செல்லலாம்.

**திரு.ஏ.எம்.ஆர். அவர்களின் ஒப்புதலுடன் நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.**

# மானம்

### அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் நினைவலைகள்



மானம் என்ற ஒரு சிறந்த பண்பு தமிழகத்தில் தலைசிறந்து விளங்குகிறது.

மானம் என்ற ஒரு அதிகாரமே வகுத்துள்ளார் திருவள்ளுவர்.

கைபோய் வாழலாம்; கால் போய் வாழலாம்; காதுபோய் வாழலாம்; கண் போய் வாழலாம்; பல்போய் வாழலாம்; செல்வம் போய் வாழலாம்; மனைவிபோய் வாழலாம்; மக்கள் போய் வாழலாம், ஆனால் உயிர் போய் வாழ முடியுமா? முடியாது. எனவே - மனைவி, மக்கள், வீடு, நிலம், புலம், கண், காது, கை, கால் இன்னோரன்ன பிற எல்லாவற்றிலும் உயர்ந்தது, சிறந்தது உயிர்.

உயர்ந்த பொருளை உள்ளே மறைமுகமாக வைப்பார்கள். நமது வீடுகளில் மேஜை நாற்காலி ஆகியவைகள் வெளியேயுள்ளன. மேஜைமீது மை புட்டி, பேனா ரூல்கழி இவைகள் எல்லாம் வெளியே இருக்கும். விலையுயர்ந்த முத்து, ரத்னம், தங்கம், நோட்டு இவைகள் உள்ளே இருக்கும். மேஜைமீது நோட்டுகளை வைத்தால் வருகின்றவரும் போகின்றவரும் எடுத்துக்கொண்டு கம்பி நீட்டி விடுவார்கள். ஆதலால் உயர்ந்த பொருளை உள்ளே வைக்கின்றோம்.

### உயிரை உள்ளே வைத்தார்

அதுபோல், கை, கால், மூக்கு, காது இவைகளை வெளியே வைத்த கடவுள் எல்லாவற்றிலும் சிறந்த உயிரை உள்ளே வைத்தார். காது, மூக்கு மாதிரி உயிரை வெளியே வைத்திருந்தால் தேர்தலில் ஒருவன் நிற்க முடியுமா? இவருக்குப் போட்டியாக நிற்பவன் பின்புறமாக வந்து முந்திரிக் கொட்டையைத் திருகுகின்ற மாதிரி உயிரைத் திருகி எடுத்துக் கொண்டு போய் விடுவான்.

இறைவனுக்கு உயிரின் அருமை தெரியும். அரிய உயிரை உள்ளே வைத்தார். அவருடைய கருணை, நாம் உயிருடன் வாழவேண்டுமென்பது.

இத்தகைய பெருமையும் அருமையும் படைத்த உயிரினும் மானம் பெரிது என்கிறார் திருவள்ளுவர்.

**'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர் நீப்பர் மானம் வரின்'**

கவரிமான் தன் உடம்பில் உள்ள உரோமம் விழுந்தால் உயிரை விட்டு விடும். அதுபோல் மானிகள் மானம் போனால் உயிரை விட்டுவிடுவார்கள்.

**'மானம் இழந்தபின் வாழாமை முன்இனிது'**

மானத்தை மதித்து வானத்தையும், மதியாத மதியுடையோர் நம் தமிழகத்தில் பலர் வாழ்ந்தார்கள்.,

வடக்கே இந்த மான வுணர்ச்சி அருகியிருந்தது. அதற்குச் சான்று இந்த வரலாறு.

பாண்டவர்கள் இந்திரப் பிரஸ்தத்தில் அதிஅற்புதமான நவரத்தினங்களைப் பதித்துப் பொன்மயமான ஒரு மணி மண்டபம் புதுக்கியிருந்தார்கள். அர்ச்சுனனால் காண்டவ தகனத்தில் உயிர் பெற்ற ஒரு அசுர வனத்தச்சன், விருவுபர்வா என்ற அசுர மன்னன் இமயச் சுனையில் இட்டிருந்த நவரத்தினங்களைப் பொதி மாடுகள் கோவேறு கழுதைகள் மீது கொணர்ந்து அம்மாமண்டபத்தைப் பல சிற்பிகளைத் துணையாகக் கொண்டு, சிந்தனைக்கும் எட்டாத வேலைப் பாடுகள் நிறைந்தனவாய்ப் பதினான்கு மாதங்களில் கட்டி முடித்தான்.

இராச சூயம் வேள்வி முடிந்தபின், துரியோதனன் தன் பரிவாரங்கள் புடைசூழ அம் மணிமண்டபத்தைக் காண வந்ததான்.

**குளத்தில் இறங்கினான்; குளம் இல்லை!**

அம்மண்டபத்தின் முன்கட்டில் மேல் தள வரிசையில் தாமரைக் குளத்தை நவமணியால் சிற்பி சித்திரித்தான். நீலமணியால் தண்ணீரையும், பச்சை மரகதத்தால் தாமரை இலைகளையும், கோமேதகத்தால் தாமரை மலரையும், வைர வைடூரியங்களால் அன்னங்களையும், புஷ்பராகத்தால் படிகளையும், பவளம், முத்து இவைகளால் வேறு பல மலர்களையும் அமைத்து, தாமரைத் தடாகத்தை அமைத்தான். கீழே பளிங்குக்கல் தளவரிசை, அப்பளிங்கின் மீது மேலேயுள்ள தாமரைத் தடாகம் தெரிந்தது. வடநாட்டு மன்னன் துரியோதனன், அதைக் கண்டு, ‘தம்பிகளே! மண்டபம் புதுக்கியவனுக்கு மதியுளதா? வழியில் குளத்தை வெட்டியுள்ளானே மடையன்’ என்று மண்டபத்தைப் புதுக்கிய சிற்பியையும், புதுப்பித்த பாண்டவர்களையும் அவமதித்து, குளத்தின் நீரினால் வேட்டி நனைந்து போகும் என்று கருதி, உடையை இடைவரை தூக்கிக் கொண்டான். குளத்தில் இறங்கினான். குளம் இல்லை. எல்லோரும் சிரித்தார்கள். ‘குளம் இல்லாத இடத்தில் குளம் என்று கருதி உடையை இடைவரை உயர்த்திக் கொண்டானே’ என்று கூறி எள்ளி நகையாடினார்கள்.

அடுத்த கட்டில் உண்மையிலேயே குளத்தை அமைத்து வழியை இருபுறத்தும் பிரித்து விட்டிருந்தான் சிற்பி. துரியோதனன் ‘தம்பியீர்! இது குளம் அன்று - இது ஏதோ கண்கட்டு வித்தை, மாயாஜாலம், நாம் அறிவுடையவர்கள்; ஏமாந்து போகக்கூடாது’ என்று கூறிக் கொண்டே வேகமாகச் சென்று குளத்தில் விழுந்தான்.

இதுதான் வடநாட்டு வரலாறு.

இனித் தென்னாட்டு வரலாறு ஒன்றைக் காட்டுகிறேன்.

மூவேந்தரும், எண்திக்கும் மதிக்கும் பெரிய தனமும் மனமும் படைத்தவர் சடையப்ப வள்ளல். கம்பரையும், பல புலவர்களையும் காத்தருளிய கருணைக்கடல் அவர். அவர் வீட்டில் ‘அன்று களைந்த கழுநீர் ஆயிரம் வேலி பாயும்’ என்பது பழமொழி. அத்துணைப் பெரிய அன்ன தாதா அவர்.

சேர, சோழ, பாண்டியன் என்ற மூவேந்தரும் சில சமயத்தில் அவரிடம் கடன் பெறுவார்கள். அதனால் அவர் ‘திரிகர்த்தராயர்’ எனப் பேர் பெற்றார். மழையென்று ஆசங்கை கொள்ளுமாறு இரவலர்க்குப் பொன் சொரியும் வள்ளற் பெருமான் அவர். அவரை நாடிவந்த வறியவன் குபேரனைப்போல் திரும்புவான். பசியால் வாடிய இலங்கைக்கு ஆயிரம் கப்பல்களில் இனாமாக நெல் அனுப்பிப் பஞ்சந்தீர்த்த பரமதயா சீலர் அவர்.

சடையப்ப முதலியார் சோழ மன்னன் பால் கௌரவ அமைச்சராயும் இருந்தார். அவரது தொடையில் சிலந்தி எழுந்தது. அது காரணமாக வீட்டுடன் இருந்தார்.

விலையுயர்ந்த ஆடை கலிங்கத்தில் நெய்வார்கள். அதனால் இடவாகு பெயராக ஆடைக்கும் கலிங்கம் என்ற பேர் ஏற்பட்டது. கலிங்கத்திலிருந்து ஒரு நெசவாளி பல நாட்கள் நெய்த அழகிய சரிகைப் பூ வேலைகள் அமைந்த ஒரு பொன்னாடையைச் சந்தன மரப்பெட்டியில் வைத்துக்கொணர்ந்தான். சோழ மன்னனிடம் காட்டி இழை ஒன்றுக்கு ஆயிரம் பொன் என்றான். அதை வாங்கும் அளவுக்குப் பொன் அப்போது இன்மையால் சோழவேந்தன் அந்த ஆடையை வாங்கவில்லை. விலைபோகாமல் கவலையோடு திரும்பினான்.

வழியில் சடையப்ப முதலியார் அவனைக் கண்டார்.

‘ஐயா நீர் எந்த ஊர்?’

‘கலிங்கம்’

‘உனக்கு என்ன கவலை? உணவு வேண்டுமா?’

‘எனக்குச் சோற்றுக் கவலையில்லை. வேற்றுக் கவலை யுண்டு.’

‘என்ன கவலை’

‘அந்தக் கவலையைத் தீர்க்க உங்களால் ஆகாது. அதற்கும் உங்களுக்கும் வெகுதூரம்.’

‘என்னய்யா? உன் குறையைக் கூறு. என்னால் முடிந்த உதவியைத் தெய்வத்தின் திருவருளைக் கொண்டு முடிப்பேன்.’

சடையப்பருடைய எளிய தோற்றத்தைக் கண்டு அவரை அலட்சியமாக எண்ணி கலிங்கன், சந்தன மரப்பெட்டியை எடுத்து அவர் முன்னே வைத்தான். பெட்டியைத் திறந்தான். ‘ஐயா! கை தொடாமல்

பாருங்கள். விலையுயர்ந்த வேட்டி. இழை ஒன்றுக்கு ஆயிரம் பொன்' என்றான்.

முதலியார், 'ப்பூ, இவ்வளவுதானா? நல்லது, சபாபதி! இந்த இழைகளை எண்ணி, அத்தனை ஆயிரம் பொன் இவரிடம் தாமதம் இன்றிக் கொடுத்து விடு' என்றார்.

பொன் தரப்பட்டது. வியாபாரி வியந்து நின்றான்.

'அன்பரே! ஒற்றை வேட்டி கட்டக் கூடாதே. இது போன்ற மற்றொரு வேட்டி இருக்கின்றதா?' என்றார் வள்ளல்.

கலிங்கன் மேலும் ஆச்சரியப்பட்டான். அம்மம்மா! இவரைப் பார்த்தால் தோற்றத்தில் எளிமை தவழ்கின்றது. அரசனும் வாங்க முடியாத உயர்ந்த உடையை ஒரு வினாடியில் தனத்தைத் தந்து வாங்கினார். இன்னும் உளதோ? என்று வினாவுகின்றார். 'எந்தப் புற்றில் என்ன பாம்பு இருக்குமோ? என்ற பழமொழி இவரளவில் சரி' என்று எண்ணிப் புருவத்தை நெறித்து நின்றான்.

'ஐயா! இன்னும் எத்தனை ஆடைகள் தயார் ஆகின்றனவோ, அத்தனையும் இங்குக் கொணர்ந்து கொடுத்துப் பணம் வாங்கிக்கொள்' என்று அவனுக்கு அன்னமும், சொர்ணமும் வழங்கி வழியனுப்பினார்.

**விலை உயர்ந்த ஆடை**

பின்னர் நான்கு நாட்களுக்குப் பின் நீராடி, அப்புதிய பொன்னாடையை இடையில் உடுத்திக்கொண்டு, சோழனுடைய பேரவையை அடைந்தார். முதலியாரை முடிமன்னன் வரவேற்றுச் சிறந்த ஆசனத்தில் இருத்தினான். தன்னால் வாங்க இயலாத அந்த உயர்ந்த உடையைத் தன் அமைச்சர் வாங்கியுடுத்தியிருப்பதைக் கண்டான்.

'முதலியார்வாள்! உடை என்ன விலை?'

'இழையொன்றுக்கு ஆயிரம் பொன்; மன்னருக்கு வேண்டுமாயின் கொண்டு வருமாறு கூறியுள்ளேன்.'

மன்னவன் அதிசயம் அடைந்தான். பல உடை வாங்கும் அளவுக்கு அவரிடம் தனம் குவிந்துள்ளது என்று கருதினான்.

'எங்கே பத்துப் பதினைந்து நாட்களாகத் தாங்கள் நமது அரசவைக்கு வரவில்லையே?'

'துடையில் சிலந்தி அதனால் வர இயலவில்லை.'

'அப்படியா? சிலந்தி ஆறிவிட்டதா?'

'ஆம், ஆறிவிட்டது. இன்னும் ஒரு துவரம் பருப்பு அவ்வளவு ஆறவேணும்.'

'ஓ! எங்கே அதைக் காட்டுங்கள்' என்றான் சோழன்.

உடனே சடையப்ப வள்ளல் விலையுயர்ந்த அந்த ஆடையை அப்படியே கிழித்தார். 'இதோ பாருங்கள் துடைப் புண்' என்றார்.

சோழமன்னன் திடுக்கிட்டான். ஆ! ஆ! என்ன இது? இழையொன்றுக்கு ஆயிரம் பொன் விலையுள்ள உடையைக் கிழித்துவிட்டீரே!

'மன்னரே! இது அரசவை. உடையை உயர்த்தினால் மானம் அழியும். இந்த உடைபோல் ஆயிரம் வாங்கலாம். இழந்த மானத்தைத் திரும்பப் பெற முடியாது. தமிழ் மகனுக்குத் தனம் பெரிதன்று, மானம் பெரிது' என்றார்! சடையப்ப முதலியார்.

அந்த அரச சபையில் இருந்த அத்தனை பேரும் இந்த நிகழ்ச்சியைக் கண்டு கண் இமைக்காது பேராச்சரியம் உற்று அமர்ந்திருந்தார்கள். மன்னன், முதலியாருடைய மான உணர்ச்சியை மதித்தான், துதித்தான்.

நீரில் நனையும் என்று வடநாட்டு மன்னன் சபையில் உடையை உயர்த்தினான்.

**மானம் மிகச் சிறந்த பண்பு**

துடைச் சிலந்தியைக் காட்ட உயர்ந்த உடையைக் கிழித்தார் தென்னாட்டுப் பெருமகன். ஆதலால் மானம் மிகச் சிறந்த பண்பு.

'துடையில் ஒருசிலந்தி தோற்றுவிக்கப் பட்டின்
புடவை கிழித்த பெருங்கை'
- திருக்கை வழக்கம் - 1

'விளைவாஞ் சிலந்தியை யாடையைக் கீறி
வெளியிலிட்டும்
வளமான கீர்த்திகொள் வேளாளர் பாண்டியன்
மண்டலமே! - 2

'உற்ற தொடைப்புண்ணுக் குடைகீறிக் காட்டி
நின்றான்
கொற்றவன் முன் உன் கங்கை கோத்திரத் தான்'
- 3

தெள்ளத் தெரிந்தவர் செய்தக்கதோர் முறை
செய்யிலையோ
எள்ளத்தனை மலையத்தனை யாமென்ப
தின்ற றிந்தோம்
உள்ளற்கரிய தொடையாடை கீறியதொன்று மொரு
வள்ளற்றகைமையொ டொத்துளதால்
தொண்டை மண்டலமே'. - 4

'வானமும் மண்ணும் அழியாது வாழ்வர் மானம்
உடைய நல்லோர்' - 5

'மானமிகு தருமத்தின் வழிநின்று'

என்கின்றார் சேக்கிழார் அடிகள்.

ஆதலின் மானம் பேணுக.

*

# உலகம் உய்ய உதித்த உடையவர்



ஸ்ரீராமானுஜர் ஸ்ரீபெரும்பூதூர்

சென்ற இதழ் தொடர்ச்சி...

**ஸ்ரீ**கோவிந்தரின் எச்சரிக்கையினை புரிந்து கொண்டு, ஸ்ரீராமானுஜர் காட்டில் மறைந்து தனி வழியாக நடந்தார். அடர்ந்த புதர்களும் மரங்களும் நிறைந்த காடு. வந்த வழியும், போகும் வழியும் தெரியாமல் பல நாட்கள் நடந்து சோர்ந்து, மிகவும் மனம் உருகி, அத்திகிரி அருளாளனை நினைந்து தியானித்து வழிகாட்ட வேண்டும் என மனதுருகி பிரார்த்திக்கிறார்.

“ஆவரார் துணை? என்று அலைநீர்க் கடலுள்
அழுந்தும்
நாவாய்போல் பிறவிக் கடலுள் நின்று
நான்துளங்க,
தேவார் கோலத்தொடும் திருச்சக்கரம்
சங்கினொடும்
ஆவா என்று அருள் செய்து அடியேனொடும்
ஆனானே.”

- திருவாய்மொழி (5-1-9)

தன் திருவடிகளை தஞ்சமென நம்பி வரும் பக்தர்களை, சரணாகதி செய்தவர்களை காத்து ரட்சிக்கும் பேரருளாரான காஞ்சி வரதராஜப் பெருமாள், தாயாருடன், வேடன், வேட்டுவச்சி வேடம் கொண்டு, அவ்விடம் வந்தார். மேற்படி திவ்ய தம்பதிகளைக் கண்ட ராமானுஜர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, “பெருந்தகையீர், நீங்கள் யார்?” என கேட்டார். அதற்கு அவர்கள் “நாங்கள் காஞ்சிபுரம் சென்று கொண்டு இருக்கிறோம்” என்றார்கள். அதனைக் கேட்ட இராமானுஜர் மிகவும் மகிழ்ச்சி அடைந்து தன்னையும் ஸ்ரீகாஞ்சிநகருக்கு அழைத்து செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அந்த திவ்ய தம்பதிகளும், இராமானுஜரை உடன் அழைத்து செல்ல சம்மதித்து, அவர்களின் பின்னாலேயே தொடர்ந்து நடந்து வரும்படி கூறினார்கள். அவர்களின் பின்னாலே ஸ்ரீகாஞ்சிக்கு செல்ல இராமானுஜரும் நடந்தார்.

கானகத்தில் ஸ்ரீராமரும், சீதாப்பிராட்டியும் நடந்து சென்றபோது, அவர்கள் திருவடிகளை நோக்கி, நடந்து சென்ற லட்சுமணரைப் போல், ஸ்ரீஇராமானுஜரும், திவ்விய தம்பதிகளின் திருவடிகளையே நோக்கி நடந்தார். பின்பு இரவானதும் மூவரும் ஒரு மரத்தடியில் தங்கினார்கள். நட்டநடுநிசி. அந்த அகால நேரத்தில் வேட்டுவச்சி தனக்கு தாகம் எடுப்பதாகக் கூறி நீர் அருந்த வேண்டும் என்று அந்த வேட்டுவனை வேண்டவும், அந்த வேட்டுவன், “விடியட்டும் பொறுமையாக இரு. அருகிலேயே கிணறு ஒன்று இருக்கிறது. விடிந்ததும் நீர் அருந்தலாம்” என கூறினான். வேட்டுவன் வேட்டுவச்சியின் உரையாடலைக் கேட்ட இராமானுஜர் இந்த தெய்வ தம்பதிகளுக்கு பருக நீர் கொடுக்க முடியாமல் இருக்கும் தன் நிலையை எண்ணி மனம் வருந்தினார். விடிந்ததும் அவர்களுக்கு பருகநீர் கொடுக்க வேண்டும் என விடிவதற்காகக் காத்திருந்தார்.

சூரியனும் கீழ்திசையில் உதிக்க ஆரம்பித்தார். வெளிச்சம் மெல்ல தவழ்ந்து வந்தது. உடனே வேடன்

– பெ. இராமநாதபிள்ளை, செயல் அலுவலர்,
திருமூர்த்திமலை, உடுமலை வட்டம்

இராமானுஜரை நோக்கி "சாலை ஓரத்தில் கிணறு ஒன்று உள்ளது. நீர் எடுத்து வாரும்" எனக் கூறினார். இராமானுஜரும் தம்பதிகளுக்கு கிணற்றிலிருந்து நீர் எடுத்து மூன்று முறை கொடுத்தார். நான்காம் முறை நீர் கொண்டு வரும்பொழுது, அந்த திவ்ய தம்பதியினரைக் காணவில்லை. திகைத்தார். பொழுது நன்கு விடிந்து, மக்கள் நடமாடிக் கொண்டிருந் தார்கள். ஸ்ரீ இராமானுஜர் மக்களை பார்த்து "இந்த ஊரின் பெயர் என்ன?" எனக் கேட்டார். இந்த ஊர் பாலாறு, ஓடும், காஞ்சி வரதராஜப் பெருமாள் ஆட்சிபுரியும் மாட மாளிகைகளும், கூடகோபுரங் களும் நிறைந்த ஸ்ரீகாஞ்சிபுரம் என்றார்கள். வியப்பின் எல்லைக்கே சென்றுவிட்டார் ஸ்ரீஇராமானுஜர். பல நாட்கள் கடக்க வேண்டிய காட்டினை ஓர் இரவில் கடக்க செய்து ஸ்ரீகாஞ்சிபுரத்தில் சேர்த்தது, காஞ்சி வரதராஜப் பெருமாளும் பெருந்தேவியாரும்தான் என்றும், வேடன், வேடச்சியாக வந்தது பெருமாளும் தாயாருந்தான் என உறுதியாக நம்பினார்.

தன் இல்லம் அடைந்த ஸ்ரீஇராமானுஜர் நடந்ததையெல்லாம் தன் தாயிடம் கூறினார். தாயும், இராமானுஜரும் காஞ்சி வரதராஜப் பெருமாள் திருக்கோயில் இருக்கும் திசையை நோக்கி வணங்கினார்கள். பின்னர் காந்திமதி அம்மையார் ஸ்ரீ இராமானுஜரிடம் "திருக்கச்சி நம்பி என்ற பெரியவர் காஞ்சியில் உள்ளார். அவரிடம் நடந்ததை எல்லாம் கூறி, அவர் விருப்பப்படி செய்வாய்" எனக் கூறினார். ஸ்ரீ இராமானுஜரும் காலதாமதம் செய்யாமல் திருக்கச்சி நம்பியார் மாளிகைக்கு சென்று, அவருடைய திருவடியில் வீழ்ந்து வணங்கி நடந்ததை எல்லாம் கூறினார். திருக்கச்சி நம்பி இராமானுஜரைப் பார்த்து "ஸ்ரீ இராமானுஜரே ஸ்ரீமன் நாராயண மூர்த்தியின் அருள் உம்மை ஆட்கொண்டு விட்டது. உம்மிடம் பேரருளாளனும் பெருந்தேவியாரும் தீர்த்தக் கைங்கர்யத்தையே விரும்புகின்றார். அவர்கள் விருப்பப்படியே சாலையோர கிணற்றிலிருந்து, பொற்குடத்தில் தீர்த்தம் கொண்டு வந்து விரைவிலேயே கைங்கர்யம் செய்வீராக" - என கூறினார். அக்கட்டளையினை தலைமேல் கொண்டு ஸ்ரீராமானுஜரும் தீர்த்த கைங்கர்யத்தை இனிதே தொடங்கி, தொடர்ந்து செய்து வந்தார். இது நிற்க!

ஸ்ரீ இராமானுஜர் ஸ்ரீகாஞ்சிபுரத்தில் இருந்து தீர்த்த கைங்கர்யம் செய்து கொண்டிருக்க, அவருடைய சித்தி மகனாகிய தம்பி, ஸ்ரீகோவிந்தன் யாதவ பிரகா சருடனும், மற்ற சீடர்களுடனும் காசியை நோக்கி சென்று கொண்டிருந்தனர். ஸ்ரீகோவிந்தர் காசிக்கு சென்று நிரந்தரமாய் அங்கு தங்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் தான் சென்றார். ஆனால் காளஹஸ்திநாதன் ஸ்ரீ கோவிந்தர் காசியில் தங்கி விடாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

யாதவ பிரகாசரும், அவருடைய சீடர்களும், கங்கையில் நீராடும்பொழுது, ஸ்ரீகாசி விஸ்வநாதர் ஸ்ரீகோவிந்தர் மீது மிகவும் அன்பு கொண்டு, சிவலிங்கமாய் ஸ்ரீகோவிந்தரின் உள்ளங்கையில் சேர்ந்தார். இதனைக் கண்டு யாதவ பிரகாசரும், மற்ற சீடர்களும் மெய்சிலிர்த்தனர். அவர்கள் ஸ்ரீகோவிந் தருக்கு கிடைத்த பாக்கியத்தை எண்ணி மகிழ்ந்தனர். யாதவ பிரகாசர் ஸ்ரீகோவிந்தரை வாழ்த்தி, "உள்ளங்கை கொணர்ந்த நாயனார்" - என பெயரிட் டார். அன்றிலிருந்து ஸ்ரீகோவிந்தர், உள்ளங்கை கொணர்ந்த நாயனார் என்ற திருநாமத்துடன் தீவிர சைவராகி சிவபூஜை செய்து, சிவபக்தரானார். ஸ்ரீகோவிந்தர் தன் பிறப்பிடமான மதுரமங்கலம் சென்று, சிவலிங்கத்தை அந்த கிராமத்தில் பிரதிஷ்டை செய்து, தூயமனத்தோடு, காளஹஸ்தி சென்று, பார்வதி பரமேஸ்வரனை வழிபட்டு, சிவனுக்கு கைங்கர்யம் செய்து வந்தார்.

ஸ்ரீராமானுஜர் காஞ்சி வரதராஜ பெருமாளுக்கு தீர்த்த கைங்கர்யம் செய்ய பணித்த திருக்கச்சிநம் பிகளை தம்முடைய ஆசார்யனாகவே, அபிமானித் தார். இம்மகான் பூவிருந்தவல்லி என்ற அழகிய ஊரில் பிறந்தார். வைஸ்ய குடும்பத்தைச் சார்ந்தவர். ஸ்ரீஇராமானுஜர் அவதரித்த கி.பி. 1017க்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது கி.பி. 1009ம் ஆண்டு சௌம்ய வருஷம் மாசி மாதம் மிருகசீர்ஷ நட்சத் திரத்தில் வீரராகவர் கமலையம்மாள் திவ்ய தம்பதி களுக்கு 4வது மகனாய் இம்மகான் அவதரித்தார். இந்த மகானுக்கு பெற்றோர் சூட்டிய திருநாமம் "கஜேந்திர தாஸர்" என்பதாம். திருமழிசை ஆழ்வார் அருளால் பிறந்தமையால் "பார்க்கவப் பிரியர்" என்றும் பெயரிட்டார். இவருடைய ஆசார்யனான ஆளவந்தார் இவருக்கு சூட்டிய நாமம் பேரருளாள தாசர் என்பதாம். ஸ்ரீகாஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்ததால் திருக்கச்சி நம்பி, காஞ்சி முனி காஞ்சிபூரணனர் என்றும் அழைக்கப்பட்டார்.

திருக்கச்சி நம்பி அர்ச்சாவதாரப் பெருமானுக்கு ஆலவட்டக் கைங்கர்யம் செய்ய பெரிதும் விரும்பினார். முதலில் ஸ்ரீரங்கம் ரங்கநாதருக்கு திருஆலவட்டக் கைங்கர்யம் செய்ய விரும்பினார். இதனை அறிந்த ரங்கநாதர் "நான் கங்கையில் புனிதமாகிய காவிரி கொள்ளிடம் நடுவே குளிர் புனல் சோலைகள் நிறைந்த இடத்தில் இருப்பதால், திருவேங்கட பெருமாளுக்கு திருஆலவட்ட கைங்கர்யம் செய்யலாம்" என திருக்கச்சி நம்பிக்கு உணர்த்தினார். திருக்கச்சி நம்பிகளும் திருப்பதி திருமலைக்கு சென்று பெருமாளுக்கு திருஆலவட்ட கைங்கர்யம் செய்ய விரும்பினார். இதனை உணர்ந்த திருமலை வேங்கடவனும் "தான் தேனார் பூஞ் சோலை திருவேங்கட மலையில், குளிர்தண்டலை இருப்பதால், தனக்கு திருஆலவட்ட கைங்கர்யம் செய்வதைவிட, (அஸ்வமேத) வேள்வியில் அவதரித்த அத்திகிரி அருளாள பெருமாளுக்கு திருஆலவட்ட கைங்கர்யம் செய்யலாம்" என உணர்த்தவும், திருக்கச்சி நம்பி காஞ்சி பெருமாளுக்கு நாள்தோறும் திருஆலவட்ட கைங்கர்யம் செய்து வந்தார்.

- தொடரும்

# பதிகப் பெருவழியில் எண்ணலங்காரம்

**முன்னுரை**

"அன்பே சிவம்" - இது திருமூலரின் திருவாக்கு. இடையறா அன்போடும், சிந்தனைத் தெளிவோடும் இறைவனை வழிபடும் அடியார்களின் திருவாக்குகளில் கற்பனை வளமும், படைப்பாற்றல் திறனும் வெளிப்படுவது இயற்கை. 'ஓதி உணர' முடியாத அவனை உள்ளத்தில் 'தேடி'யே உணர வேண்டும் அல்லவா? இந்தத் தேடலின் வெளிப்பாடே - வெளிப்பாட்டுப் பரிமாணமே - எண்ணலங்காரம்.

சைவர்களின் வேதமாக கருதப்படுவன பன்னிரு திருமுறைகள். திருநீற்றின் பெருமையும், திருவைந்தெழுத்தின் அருமையும், சிவபெருமானின் அருள் திறனும் இன்னபிறவும் திருமுறைகளில் பேசப்படுகின்றன. இவற்றை பல்வேறு கால கட்டங்களில் இருபத்து ஏழு ஆசிரியர்கள் அருளிச் செய்துள்ளனர். சம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர், திருமூலர் முதலியோரின் படைப்புக்களில் எண்ணலங்கார அடிப்படையில் உள்ள பதிகங்கள் சிந்தைக்கும் செவிக்கும் விருந்தாக அமைந்துள்ளன. இத்திருப்பாடல்கள் இறைவழிபாட்டிற்கு சுவை கூட்டி வலிமை சேர்க்கிறது.

இறைவனின் அருமை பெருமைகளைப் போற்றும் பதிகங்களை பாடிப் பரவும் திருநெறியே 'பதிகப் பெருவழி' எனப்படுகிறது. நம்பியாண்டார் நம்பிகள் பதினோறாம் திருமுறையில் 'ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி' என்னும் பனுவலில் 'பதிகப் பெருவழி' என்ற சொல்லாட்சியைக் கையாளுகிறார்.

இறைவனை அடையும் மார்க்கங்களாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு வழிமுறைகள் உண்டு. இவை அனைத்தையும் காட்டிலும் மிக எளிய மார்க்கம் பதிகப் பெருவழியே ஆகும். தேவாரம், திருவாசகம் மற்ற திருமுறைப் பாடல்களைப் படிப்பது, பாடுவது, பாடச் சொல்விக் கேட்பது முதலியனவே பதிகப் பெருவழியாகும்.



திருஞானசம்பந்தர்

ஒன்று, இரண்டு மூன்று போன்ற எண்களை பற்பல வரிசைக் கிரமங்களில் பயன்படுத்தி இறைவனின் திருவுருவம், திருவருள், பேராற்றல், எளிவந்த தன்மை ஆகியவற்றை விளக்கி பாமாலைகள் புனைந்து வழிபடுதலே எண்ணலங்காரம் ஆகும். எடுத்துக்காட்டாக - ஒன்று, ஒன்று இரண்டு ஒன்று, ஒன்று இரண்டு மூன்று இரண்டு ஒன்று என்பன போல ஏறுவரிசை - இறங்கு வரிசைத் தொடர்களாகவும் பாடல்கள் அமைகின்றன. இவற்றில் வழிபாட்டுப் பரிமாணம் மட்டுமின்றி எண்களின் பயன்பாட்டு வித்தைகளும் யாப்பு வகைப் பரிமாணங்களாக பரிணமிக்கின்றன. இது ஒரு புதுமயான அமைப்பு

**ஞான சம்பந்தரின் திருஎழு கூற்றிருக்கைப் பதிகம்**

திருநெறிய தமிழ் தந்த ஞான சம்பந்தர் அருளிய திருஎழுகூற்றிருக்கைப் பதிகமே தமிழ் யாப்பில் முதன் முதலாகத் தோன்றிய இத்தகைத்தான பதிகமாகும். சம்பந்தர் தேவாரத்தின் முழுமைத் திரட்சியும் இப்பதிகத்தில் உள்ளது என்று அருளாளர்களும் மொழி வல்லுனர்களும் கூறுவர். சம்பந்தர் தேவாரத்தில் இடம் பெறும் பதிகங்கள் 383. தம் தந்தையார் சிவபாத இருதயர் வயோதிகம் காரணமாக பெருமானின் தேவாரப் பதிகங்கள் அனைத்தையும் அன்றாடம்

- சேத்துப்பட்டு சித்தாந்த இரத்தினம்
டாக்டர் எம்.ஆர். சந்தானம்

படனம் செய்யவியலாத நிலையில் தம் தந்தையார்க்கு என "ஓர் உரு ஆயினை" என்று தொடங்கும் இப்பதிகத்தை அவரது அன்றாட பாராயணத்திற்கு உகந்த வகையில் செய்து அருளினார். இப்பதிகத்தை நாள்தோறும் பயின்றால் பெருமானின் அனைத்துப் பதிகங்களையும் படனம் செய்வதற்கு ஒப்பாகும். இவ்வுண்மை, "எந்தைக்கு எழுகூற்றிருக்கை.... எல்லாப் பொருள்களும் முற்றப் பாடினார்" என்று சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் கூறுவதால் பெறப்படுகிறது.

"ஓர் உரு ஆயினை" எனத்துவங்கி "நீள் நிலத்தே" என்று முடியும் திருஎழுக்கூற்றிருக்கை பதிகம் ஒன்று முதல் ஏழு ஈறாக ஏறியும் இறங்கியும் எண்ணலங்காரம் பாடப் படுவதாகும். இது இணைக் குறள் ஆசிரியப்பா வகைத்தான ஒரே பாட்டு; ஆயினும் மரபு பற்றிப் 'பதிகம்' எனப்படுகிறது. இப்பதிகத்தில் மொத்தம் 47 வரிகள் உள்ளன.

இதில் சிவ பூசை, குரு பூசை, மகேசுர பூசை, அந்தணர் பூசை, அதிதி பூசை ஆகிய ஐவகை வேள்விகள் பேசப்படுகின்றன. அல்லது பரம யாகம், தேவ யாகம், மானுட யாகம், பிதிர் யாகம், பூத யாகம் என்பனவற்றையும் ஐவகை வேள்விகளாகக் கொள்ளலாம். ஆறு அங்கம் என்று குறிப்பிடப்பட்டு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல் ஏற்றல் ஆகியன பேசப்படுகின்றன. மாறாக ஆறு வேதாந்தங்களாகிய சிட்கை, வியாகரணம், கற்பசூத்திரம், சந்தோவிசிதம், நிருத்தம், சோதிடம் ஆகியவற்றையும் ஆறங்கம் என்ற சொல் குறிப்பிடுவதாகவும் கொள்ளலாம்.



திருநாவுக்கரசர்

### திருநாவுக்கரசரின் விடந்தீர்த்த திருப்பதிகம்

திருநாவுக்கரசப் பெருமான் 'விடந்தீர்த்த திருப்பதிக'த்தில், ஒன்று முதல் பத்து வரையிலான எண்கள் ஒவ்வொன்றுக்கும் நாவுக்கரச பெருமான் திங்களூரை அடைந்து, தம்மைக் குலதெய்வமாகவே மதித்து வழிபட்டு வந்த அப்பூதி அடிகளைச் சந்தித்தார். தன் மகனுக்கு மூத்த திருநாவுக்கரசு என்றே பெயரிட்டு மகிழ்ந்தவர் அப்பூதி அடிகள். அவரது இல்லத்தில் திருவமுது செய்தருள இசைந்த நாவுக்கரசர் பெருமான், அப்பூதி அடிகளாரின் புதல்வன் மூத்த திருநாவுக்கரசன் விருந்துக்காக வாழைக்குருத்தை அரிந்து வர தோட்டத்திற்கு சென்ற போது பாம்பு தீண்டி இறந்ததை அறிந்து துணுக்குற்றார். மகன் இறந்த கவலையையும் மறைத்து நாவுக்கரசருக்கு அமுது படைக்க முற்பட்ட அப்பூதி அடிகளை அன்போடு கடிந்து கொண்டு, இறந்த புதல்வனின் உடலைத் திருக்கோயிலின் முன் கொணரச் செய்தார். அரவின் விடம் நீங்கி மீண்டும் அவன் உயிர் பெற்று எழுமாறு, சிவபெருமானின் அருளை நாடி "ஒன்று கொலாம் அவர் சிந்தை" என்று துவங்கும் பதிகத்தைப் பாடி அருளினார். பதிகம் முடிக்கப்பட்டதும், உறக்கம் நீங்கி விழித்து எழுபவனைப் போன்று உயிர்பெற்று எழுந்த மூத்த திருநாவுக்கரசன் நாவுக்கரசர் பெருந்தகையின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.


இப்பதிகத்தின் முதற் பாடல் "ஒன்றுகொலாமவர்............ ஊர்வது தானே" என்றும், பத்தாவதாக இறுதிப் பாடல் "பத்துகொலாமவர்.................. அடியார் செய்கை தானே" என்று முடிகிறது. இப்பதிகத்தில் அமைந்துள்ள எண்ணலங்காரம் சிவசிந்தனைக்கு உரமிடுவதோடு, நாவுக்கரசர் பெருமான் ஆற்றிய விடம் நீக்கிய அதிசயச் செயல் நம் போன்றவரை வியப்புக்குள்ளாக்குகிறது. நாவுக்கரசர், பெருமான் ஒரு சாதாரண ஞானி அல்ல; உலக நெறியைக் கைவிட்டு, வீட்டு நெறியைத் தலைப்பட்டு, 'சுத்த நிலை'யில் பரஞானம் கைவரப்பெற்ற சிவஞானி ஆவார். 'ஏகனா'கி இறைப்பணி ஒழுகும் ஒழுக்கத்தை மேற்கொண்ட அவரின் வேண்டுதலுக்கு செவிசாய்ப்பது கருணையே வடிவான சிவபெருமானின் கடமையே அன்றோ.



மாணிக்கவாசகர்

### மணிவாசகரின் திருத்தோணோக்கம்

மணிவாசகப் பெருமானின் திருவாசகப் பாடல் ஒன்றிலும் எண்ணலங்காரம் வெளிப்படுகிறது. இறைவன் ஒருவனே பலவாகி நிற்கும் தன்மையை உணர்த்தும் இப்பாடல்



திருமூலதேவ நாயனார்

"நிலம் நீர் நெருப்புயிர் நீள்விசும்பு
நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண் வகையாய்ப்
புணர்ந்து நின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தான்
ஒருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடோமோ."

என்பதாகும். தில்லையில் அருளப்பட்ட இப்பதிகத்தில் பிரபஞ்ச சுத்தி பேசப்படுகிறது.

**திருமூலர் அருளிய திருமந்திரத்தில் கடவுள் வாழ்த்து**

பத்தாம் திருமுறையாக விளங்கும் திருமந்திரத்தில் கடவுள் வாழ்த்துப் பாடலும் எண்ணலங்காரத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது.

திருவாவடுதுறையை அடுத்துள்ள சாத்தனூரில் ஆனிரை மேய்க்கும் குடியில் பிறந்த மூலன் என்பவன் ஒருநாள் வழக்கம்போல் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த சமயம் உயிர் பிரிந்து நிலத்தில் வீழ்ந்து சாய்ந்தான். அவனால் மேய்க்கப்பட்டு வந்த பசுக்கள் அவனது உணர்வற்ற உடலைச் சுற்றிச் சுழன்று வந்து கதறுவனவாக இருந்தன. அவ்வமயம் திருக்கையிலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல் பூண்ட திருநந்திதேவரின் மாணவர் ஒருவர் - அணிமா முதலிய எண்வகை சித்திகளும் கைவரப்பெற்றவர் - தென்திசைப் பொதிகை மலையில் இருந்த அகத்திய முனிவரை சந்திக்கும் பொருட்டு திருக்கையிலையினின்று புறப்பட்டு வழியில் திருவாவடுதுறை சிவபெருமானை வழிபட்டார். பின்னர் அத்தலத்திலிருந்து புறப்பட்டு செல்லுகையில், காவிரிக்கரையில் பசுக் கூட்டங்கள், மூலனின் உயிரற்ற உடலைச் சுற்றிச் சுற்றி வந்து கதறுவதையும் கண்டார். இறைவனின் திருவருளால் அவர் அப்பசுக்களின் துயரத்தைக் களையத் துணிந்தார். பரகாயப் பிரவேசம் (கூடுவிட்டு கூடுபாய்தல்) என்ற வகை சித்துத் திறனால் தம்முடைய திருமேனியை பாதுகாப்பான ஓர் இடத்தே மறைத்து வைத்துவிட்டு, உயிரற்ற மூலனின் உடலில் தம் உயிரைச் செலுத்தி, 'திருமூல'ராய் எழுந்தார். துயரம் நீங்கிய பசுக்கள் மகிழ்ச்சியாகப் புல் மேய்ந்தன. மாலையில் தத்தம் வீடுகளுக்கு சென்று அடைய, திருமூலர் அன்றிரவு மூலனின் மனைவி தம்மைத் தீண்ட ஒண்ணாதவராய், அந்த ஊர் மடத்தில் புகுந்து சிவயோகத்தில் அமர்ந்தார். மறுநாள் காலை, பத்திரமாக வைத்திருந்த தமது உடல் வைத்த இடத்தில் காணவில்லை. இது சிவபெருமானின் திருவருள் திறமே என தம் மெய்யுணர்வு சிந்தையில் ஆய்ந்து தெளிந்தார்.

திருவாவடுதுறைத் திருக்கோயிலின் மேற்கு மதிற்புறத்தே உள்ள அரசமரத்தின் கீழ் தேவாசனத்தில் அமர்ந்து, சிவயோகி நிலையில் உலகம் உய்யும் பொருட்டு, 'திருமந்திர மாலை' என்ற பனுவலை இயற்றி அருளினார். அந்நிலையில்,

"ஒன்று அவன் தானே; இரண்டு அவன்
இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்குணர்ந்தான்;
ஐந்து
வென்றனன்; ஆறு விரித்தனன்; ஏழ் உம்பர்ச்
சென்றனன்; தான் இருந்தான்
உணர்ந்துஎட்டே"

என்ற கடவுள் வழிபாட்டுப் பாடலைத் தொடங்கி ஆண்டிற்கு ஒரு திருப்பாடல் என்ற வகையில் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோக நிலையில் அமர்ந்திருந்து மூவாயிரம் திருப்பாடல்களை அருளிச் செய்தார். 'தமிழ் மூவாயிரம்' எனப்படும் இதுவே திருமந்திரமென்று பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுகிறது. இந்த இறைவணக்கப் பாடலில் ஒன்று முதல் எட்டு ஈராக எண்களைப் பயன்படுத்தி இறைவனின் தன்மை விவரிக்கப்படுகிறது.

விரிக்கின் பெருகும்.

எண்ணலங்கார ரசிப்புப் பின்னணியில் சிவசிந்தனை நிகழ்வதே ஈடில்லா ஒரு சிவானுபவமாகும்.

*


# கந்தர் அநுபூதி

சென்ற இதழ் தொடர்ச்சி -

**"ஆனா அமுதே அயில்வேல் அரசே**
**ஞானா கரனே நவிலத் தகுமோ**
**யானாகிய என் னைவிழுங் கிவெறும்**
**தானாய் நிலைநின் றதுதற் பரமே!" - 28**

பக்தன் ஆண்டவனை விழுங்க வேண்டுமென்று செல்கிறான். ஆனால் ஆண்டவன் அவனை விழுங்கிவிடுகிறான். அதாவது தன்னிலும் மேற்பட்ட ஒப்பற்ற பொருளாகிய முருகப் பெருமானே தன்னை அப்படியே வாரி விழுங்கித் தனக்குள்ளாக வைத்து விட்டான் என்பது அருணகிரியின் பெருமிதம். அதுதான் அநுபூதி நிலை 'தான்அற்று' அவனாக மாறிவிட்டார் அருணகிரி.

"ஆனா அமுதே" என்றால் - அழியா அமுதே என்று பொருள். முக்தியாய் இருக்கிற பேரின்பத்தைக் கொடுத்தது ஞானம். ஞான சக்தியாகிய கூர்வேல் வைத்துள்ளான் அந்தப் பேரின்பத்தை நான் சொல்ல முடியுமா வார்த்தையால்! அவன் அயில் வேலரசன், ஞான பண்டிதன்.



"நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந்துருகத் தஞ்சம் அருள்பவன் அவனே!"

முருகப் பெருமானை "மேருமலை" என்று சொன்னார். அடுத்த பாட்டில் "குணங்களாகிய மலை" என்று சொன்னார். மேரு மலை என்று சொல்லுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. மேரு என்பது மத்திய ஸ்தானம். நடு இடம், அங்கு தங்குபவன் அவன் தானே!

அடுத்த பாடலில் "இல்லம்" "மனைவி" மக்கள் என்பதெல்லாம் மாயை என்று கூறுகிறார். சில பேர் இல்லந்துறந்து சன்யாசம் வாங்கிச் சென்ற பின்னும் மறந்து வாழ முடியாமல் தவிப்பர். துறந்தால் போதாது; மறந்து வாழ்தல் நன்று. நாவுக்கரசர் பெருமான் சைவத்தைத் துறந்தார், சமணத்தில் சேர்ந்தார். ஆனால், சைவத்தை, சிவனை மறக்கவில்லை. நானோ இப்படி மனை, மனைவி என்ற மாயையில் அறியாமையால் சிக்கித் தவறு செய்கிறேன். நீ பொறுத்துக் கொள்.

12 தோளிலேயும் பாட்டுகளாகிய மாலை நான் போட்டதை நீ தாங்கிக் கொண்டிருக்கிறாய். "மல்லே புரி பன்னிரு வாகுவில் என் சொல்லே புனையும் சுடர் வேலவனே!" நீ எனக்கு ஞானத்தை கொடுக்கலாகாதா? இந்தக் குடும்பமான மாயையிலிருந்து என்னை நீக்கக் கூடாதா?

**"இல்லே எனுமா யையில் இட் டனைநீ!**
**பொல்லேன் அறியாமை பொறுத் திலையே!**
**மல்லேபுரி பன்னிரு வா குவில் என்**
**சொல்லே புனையும் சுடர்வே லவனே!" - 29**

பற்றறுத்துவிட்டால் சமாதிநிலை தான் அடுத்தது.

நீல நிறமாயிருந்த ஆகாயத்திலே வெள்ளை வெளேரென்று கொக்கு கூட்டம் பறந்து போவதை இராமகிருஷ்ண பரமஹம்சர் பார்த்தார். அப்படியே சமாதி நிலையடைந்து கீழே விழுந்துவிட்டார். இராமானுஜர் திருப்பாவை சொல்லிக் கொண்டு இருக்கிறார். எந்த திருப்பாசுரம் தெரியுமா, "உந்து மத களிற்றன்" பாசுரம் "கந்தம் கமழும் குழலி...! உன் கை வளை ஒலிக்க வர வேண்டும், கிருஷ்ண பரமாத்மா இருக்கிற அந்தப் புறக் கதவை நீ திறக்க வேண்டும். நீ ஜெயித்த பந்தோடு வந்து கதவை திறக்க வேண்டும்" என்ற பொருள் உடைய அடிகள் இத்திருப் பாவையில் வருகின்றன.

இராமானுஜர் இந்த திருப்பாட்டை பாடிக்கொண்டு இருக்கும்போது பெரிய நம்பியுடைய பெண் வளை ஒலிக்க கதவைத் திறந்தாள். அதைப் பார்த்த இராமானுஜர் அந்த இராதையே வந்து கதவைத் திறந்து தன்னைக் கிருஷ்ண பரமாத்மாவிடம் சேர்க்கப் போகிறாள் என்று நினைத்து மூர்ச்சையாகி சமாதி நிலையடைந்து விட்டார்.

இந்த சமாதி நிலையில் மூச்சும் நாடியும் கூட நின்று போகும். எவ்வித உணர்ச்சியும் இருக்காது.

**- டாக்டர். சரசுவதி இராமநாதன்**

இதுதான் சமாதி நிலைக்குப் போகும் நேரம். நல்ல பாட்டாகப் பாடினால் ராம கிருஷ்ண பரமஹம்சர் சமாதி நிலை அடைந்துவிட்டார். சிவந்த வாகனத்தைக் கண்டால் முருக பக்தனுக்கு முருகன் நினைவு வர வேண்டும். அப்படியே உருகி, அன்பு பெருகி, பரவச நிலை அடைய வேண்டும்.

"செவ்வான் உருவில் திகழும் வேலவன்..."

'செக்கச் செவேலென்று இருக்கும் முருகப் பெருமானே' என்று அழைக்கிறார். அதாவது அதிகாலையில் செக்கச் செவேலென்று இருக்கும் ஆகாயத்தில் தங்கத் தாம்பாளம் போல் தோன்றும். சூரியன் போல முருகப் பெருமான் உள்ளார். 'பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி' என்பார் நக்கீரர்.

இராமாயணத்தில் விஸ்வரூபம் ஆஞ்சநேயருக்குத் தான் உண்டு. இராமனுக்குக் கிடையாது. இராமனுடைய படையில் வந்திருக்கும் வீரர்கள் கடற்கரையில் இருக்கும் மணலை விட அதிகமானவர்கள் என்று ஆஞ்சநேயர் குறிப்பிட்டுள்ளார். அவர்களில் நான் சாதாரணப் பணியாள் என்றார். விசுவரூபம் எடுக்ககூடிய சக்திமிக்க அனுமன் தன்னை எளிய பணியாளன் என்று குறிப்பிட்டது எளிமை!

படிக்காதவன் பணிவோடு இருந்தால் "அப்படித்தான் இருப்பான்" என்று கூறுவர். ஏழைக் குடும்பத்தில் உள்ளவன் பணிவோடு இருந்தால் "அப்படித்தான் இருப்பான்" என்று சொல்வார்கள். ஆனால் நல்ல குடும்பத்தில் பிறந்தவன், நல்ல பணக்காரன் நல்ல நல்ல படிப்புப் படித்தவன் பணிவோடு இருந்தால் அது மிகப் பெரிய செல்வமாகும். இங்கே முருகப் பெருமானைக் கண்டு அடக்கத்தோடு பணிவோடு, நாம் மிகத்தாழ்ந்தவர்; அவர் மிக உயர்ந்தவர் என்று ஈடுபடுத்திப் பார்க்கும் போது,

"செவ்வான் உருவில் திகழ்வேலவன் அன்று ஒவ்வாதது என உணர்வித்துதான் - எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பது? ஆண்டவனை எல்லா இடத்திலும் பார்க்கிற தன்மை வராது. வெறும் தமிழ் இலக்கணத்தை படித்துவிட்டுப் பாட்டுப் பாடுவதை விட, திருவருளாலே பாடுவது சிறப்பு. இயல்பான கவிதா சக்தி உள்ளவன் பாடுவது மிகச் சிறப்பு.

ஆண்டவன் திருவருளால் பாடுகிற அருணகிரி நாதருடைய கவிதா சக்திக்கு ஈடு உவமை கிடையாது. "மருங்கிலா நங்கையும்" என்று கம்பன் சொன்னான். இடுப்பில்லாத நங்கையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குச் "சீதையின் பக்கத்தில் இன்னொரு பெண்ணை ஒப்புவமையாக வைத்துப் பார்க்க முடியாது" என்று நான் அர்த்தம் கூறினேன். ஒவ்வாதது என்பதற்கு அர்த்தம் ஆண்டவனே வந்து சொல்லிக் கொடுக்கிற பாடத்திற்கு ஒப்புவமை சொல்ல முடியாது. ஆனால் நாம் சொல்லிக் கொடுக்கும் பாடத்திற்கு ஒப்புவமை சொல்லலாம்.

என்னை எடுத்து உபதேசித்து பாடல் சொன்னான், முருகப் பெருமான்! அவனே உபதேசம் செய்வதைக்கேட்டுத் தெரிந்து கொள்வதைத் தவிர வேறு எதுவும் கேட்க முடியவில்லை என்று கூறுகிறார். நாட்டுச் சர்க்கரைக்கும், அஸ்கா சீனிக்கும் தித்திப்பில் வித்தியாசம் இருக்கிறதா? இந்த வித்தியாசத்தை ஒரு பக்க அளவில் கட்டுரை எழுத முடியுமா? முடியாது. வித்தியாசம் தெரியும். ஆனால் எழுத முடியாது, அதேபோல்தான், முருகப் பெருமானுடைய உபதேசத்தினால் வந்த பேரின்பத்தை வார்த்தையால் செல்ல முடியுமா? சிற்றின்பத்தையே சொல்ல முடியாது. என்றால் இந்தப் பேரின்பத்தை எப்படிச் சொல்ல முடியும்?

செவ்வான் உருவில் திகழ்கின்ற முருகன் உணர்வித்ததை எவ்வாறு இசைவிப்பது? நான் எப்படி முருகப் பெருமானை அனுபவித்தேனோ அதேபோல் நீங்களும் முருகப் பெருமானை அனுபவிக்க வேண்டும் என்று கைகாட்டி விட்டார்.

"செவ்வான் உருவில் திகழ்வே லவன்அன்
றெவ்வாத தென உணர்வித் ததுதான்
அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே!" (30)


திருக்கோயில்

திங்கள் இதழ்



| | |
|---|---|
| தனி இதழின் விலை | ரூ. 10/- |
| ஓராண்டு சந்தா | ரூ. 120/- |
| ஐந்தாண்டு சந்தா | ரூ. 500/- |
| பத்து ஆண்டுச் சந்தா | ரூ. 1000/- |
| ஆயுட்காலச் சந்தா | ரூ. 1500/- |

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,

119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

# உடல் - மனம் - ஆன்மா

இறைவன் படைப்புகளிலேயே மிகப் பெரிய அதிசயமான, அபூர்வமான படைப்பு நம்முடைய மானிட தேகந்தான்.

பனித்துளியில் ஒரு பாதி அளவிலான ஜீவ ஜலம், தந்தையிடமிருந்து தாயின் கருவறையில் வந்து தங்கிற்று. பிறகு அதுவே பத்துத் திங்களில் அற்புதமான தேகத்தை உருவாக்கி வெளியே வந்தது.

யாரும் கட்ட முடியாத திருமாளிகையே நம் மானிடத் தேகம்.

மனிதன் என்பவன் இந்த உடம்போடு மனம், ஆன்மா என மூன்றும் சேர்ந்த வடிவினன். இந்த உடம்பும், மனமும் மாறக் கூடியவை. ஆனால், ஆன்மா என்றும் அழியாதது; நித்தியமானது.

இந்த உடலுக்கு ஆன்மிக உணர்வு கிடையாது. இதில் இருப்பது புலனின்பந்தான். இந்த உடம்புக்கு இளமை, முதுமை, மரணம் என்றெல்லாம் உண்டு.

ஆயினும், இந்த உடம்புதான் இறைவன் உறையும் உண்மையான திருக்கோயில். இதற்கு ஈடு இணையான கடவுள் வீற்றிருக்கும் க்ஷேத்திரம் உலகில் வேறெங்கும் இல்லை.

எனவே தான், 'உடம்பு இறைவன் வாழும் நகரம். அது பிரம்மபுரம்' என்கிறது சாந்தோக்கிய உபநிஷதம். 'காயமே கோயிலாக' என்று அப்பர் சுவாமிகளும் 'ஊனுடம்பு ஆலயம்' என்று திருமூலரும் போற்றிப் பாடியுள்ளனர்.

மனிதனுக்கு இக வாழ்வானாலும் சரி அல்லது பர வாழ்வானாலும் சரி, நல்ல ஆரோக்கியமான உடம்பு மிகவும் அவசியமாகும்.

அருந்துதல், பொருந்துதல், உறங்குதல் அதாவது உணவு, போகம், உறக்கம் இவை மூன்றிலும் மிதமாக இருத்தலே உடம்பை வளர்க்கும் உபாயங்களாகும்.

இந்த அரிய, அபூர்வமான உடம்பை முதலில் நேசிக்க வேண்டும். அதனோடு மிகவும் நட்பாக இருக்க வேண்டும். அதன் தேவைகளைக் கவனிக்க வேண்டும். ஏனெனில், இந்த உடம்புதான், வாழ்வின் அடித்தளமாகவும், நம் உயிரின் - ஆன்மாவின் திருக்கோயிலாகவும் விளங்குகிறது.

'முத்தியடைவதற்கு இம்மானிட தேகமே தக்கதாயும், வேறு தேகத்தால் அடைவது அரிதாயும் இருப்பது ஆதலால், எவ்விதத்தால் ஆயினும் தேகம் நீடித்திருக்கும்படி பாதுகாத்தல் வேண்டும்' என வள்ளற்பெருமானும் உடம்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார்கள்.

எனவே, நம் ஆன்மிக யாத்திரையை முதலில் நம் உடம்பிலிருந்து தான் ஆரம்பிக்க வேண்டும்.

'உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டான்
என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேன்'

என்றும்,

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்'

என்றும்,

உடம்பாலயத்தைப் போற்றிக் காப்பதின் அவசியத்தைத் திருமூலர் வலியுறுத்திப் பாடியுள்ளார்கள்.

ஆனாலும், இந்த உடம்பை ஆள்வது, நிர்வகிப்பது மனந்தான்.

மனம் பதற்றமடைந்தால், உடம்பு பதற்றமடைகிறது. மனம் சந்தோஷமுற்றால், உடம்பும் அதனை எதிரொலிக்கிறது.

எண்ணங்கள், சிந்தனைகள் இவற்றின் சங்கிலித் தொடரே மனம் என்பதாகும். ஆம், எண்ணங்களின் கோர்வையே மனமாகும்.

மனம் எப்போதும் எதையாவது நினைத்துக் கொண்டு இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருக்கும். நினைப்பது என்றாலே மனம் அலைவதுதான்; ஓரிடத்தில் உட்காருவதே இல்லை; உட்காரவும் முடியாது; எப்போதும் வெளியில் செல்லும் தன்மை படைத்ததுதான் மனம்.

இந்த மனத்திற்குத் தேகமில்லை. அதனால் பேய் என்றார்கள். அது ஒன்றைவிட்டு, இன்னொன்றிற்குத் தாவிக் கொண்டிருக்கும் தன்மையாதலால், நம் பெரியோர்கள் மனக்குரங்கு என்றார்கள்.

ஆக, நம்மை இயக்குவது மனமே. எல்லாச் செயலுக்கும் கர்த்தர்வாக இருப்பதும் மனமே. மனத்தின் வசப்பட்டவரே மனிதர் ஆவார்.

சுகம் வேண்டும், செல்வம் வேண்டும், மாளிகை வேண்டும் என்றெல்லாம் ஏதாவது ஆசையை எழுப்பி, அலைய வைத்து, கவலையில் ஆழ்த்துவதும் மனம்தான்.

ஆனால், எதை அனுபவித்தாலும், மனம் அடங்குவதில்லை, திருப்தி அடைவதில்லை.

காமம், கோபம், விருப்பு, வெறுப்பு, துயரம் ஆகியவற்றிற்கும் இந்த மனந்தான் காரணமாகும்.

உனக்குத் தலைவன், உன்னை நடத்துபவன் உன்மனந்தான். ஆனால் அவன் உன்னை எப்போதும் தீங்கில் தள்ளவே காத்துக் கொண்டிருக்கிறான்.

**- தென்னம்பட்டு ஏகாம்பரம்**

மனம் என்பது ஆசையேயன்றி வேறொன்றுமில்லை. ஆசையும், மனமும் ஒன்றுதான். புத்தருடைய மொழியில் மனமே ஆசையாகும்.

ஆசைகளிலிருந்து மனதைக் கழட்டுவதற்காகவே, வணக்கம், வழிபாடு, நோன்பு, விரதம், ஆசாரம், அனுஷ்டானம், யாத்திரை முதலானவை எல்லாச் சமயங்களிலும் எடுத்து வைக்கப் பெற்றுள்ளன.

'மனம் எனும் மாடு அடங்கில் முத்தி வாய்க்கும்' என்றார் நம் சித்தர் முத்தர்கள்.

உடம்பையும், மனத்தையும் தாண்டி நம்மில் ஆன்மா என்ற ஒன்று உள்ளது. வாஸ்தவத்தில் நாம் உடம்போ, மனமோ அல்ல, பேரறிவு வடிவமான ஆன்மாதான்.

வாழ்க்கையில் நாம் மிக முக்கியமாகக் கற்றுக் கொள்ள வேண்டியது, நாம் உடல் அல்ல, மனம் அல்ல, ஆன்மாதான். உடம்பு என்பது உண்மையில், ஆன்மா போர்த்தியுள்ள மேலாடையே ஆகும் என்பதுதான்.

தன்னை உடலாகக் கருதுவது அறியாமை. நாம் என்றும் அழியாது ஆன்மாவாக இருக்கிறோம்.

நாம் உடலா அல்லது உயிரா எனக் கேட்டால், சரியான பதில் சொல்ல யாருக்கும் தெரியவில்லை. நாம் உடலல்ல, நாம் உயிர்தான் - ஆன்மாதான். நமக்கு வைத்திருக்கும் திருநாமம் உயிருக்குத்தானே தவிர உடலுக்கு அல்ல.

இந்த உடலானது அழியும். ஆனால், நித்திய பொருளான உயிர் அழிவதில்லை. பஞ்சபூதமும் இந்த ஆன்மாவிடமிருந்தே கடன் பெற்று, தேகமாகிய இந்த கூட்டைக் கட்டிற்று. சர்வத்திற்கும் ஆன்மாவே தாய்க் குடிலாக இருக்கிறது.

ஆனால் அந்த நித்தியமாகிய ஆன்மா - பேரறிவு வஸ்து - அது எங்கே இருக்கிறது என்றால், இந்த அநித்திய தேகத்தில் தான் இருக்கிறது.

நமக்கு சீரும் சிறப்பும் தருகின்ற உயிர், இரவு பகல் பாராது ஓயாது ஊழியம் செய்து கொண்டிருக்கும் ஆருயிர், நம்மிடத்தில் இருந்தாலும் அது எங்கிருக்கிறது எப்படியிருக்கிறது என்பது தெரியவில்லை.

அதுதான் நம் சொந்த தேகம். அழியாதது. அநாதியானது. நம் ஊனக் கண்ணுக்கு அறிய முடியாத பொருளாக நமக்குள் அது வைக்கப்பெற்றிருக்கிறது. அதையே மூலமந்திரம், பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம், பிரணவம், கலிமா என சமய நெறியில் பேசப்பெற்றுள்ளது. அதைப் பெறவே நாம் வந்தோம்.

சீரும் சிறப்பும் மதிப்பும் புகழும் ஆட்சியும் அழகும் நமக்கு காலமெல்லாம் தந்து கொண்டிருக்கிற உயிரை - ஆன்மாவைப் பார்க்க வேண்டாமா?

ஒரு பெரிய அரண்மனைக்குச் சொந்தக்காரரான சக்கரவர்த்தி அரண்மனையின் முற்றத்தில் மட்டுமே வாழ்வதைப் போல, பரம்பொருள் வடிவமான ஆன்மாவின் சொந்தக்காரர்களான நாம், நம் உடம்போடு வாழ்ந்து மடிந்து போகலாமா?

ஆன்மாவை இங்கேயே இப்பொழுதே அறிந்தால்தான், வாழ்க்கையில் உண்மையான நிறைவு ஏற்படும். இல்லாவிட்டால் இந்தப் பிறவி, மாபெரும் இழப்பாகும்.

'ஆன்மாவை அறியாதவர்களுக்கு உடல் ஒரு சுமை' என்கிறது மகோபநிஷதம். நடமாடும் பிணம் எனலாம்.

எங்கும் நிறைந்த பரம்பொருளே, நம் இருதயத்தில் ஆன்மாவாக - உயிராக ஒளிர்கிறது.

நம் உடலுக்குள் ஒரு தலைமுறைக் காலம் குடியேறியிருக்கிறது, இதை நாற விடாமல் காப்பாற்றி வருகின்ற நம் உயிராகிய ஜீவன், இந்தக் கடத்துக்குள் இருப்பதால் கடவுள்.

உரைமனம் கடந்த ஒரு பெருவெளியில் அரசு செய்து ஓச்சும் அருட்பெருஞ்சோதியாக நம் ஆன்மா உள்ளது.

'ஆதி என்ற தீபமடா ஆத்மாவாகும்' என்கிறார் அகத்திய மாமுனிவர். ஆதி என்பதும் தீபம் என்பதும் என்னவென்று குருமுகமாய்த் தெரிந்து கொண்டால், ஆன்மா தரிசனமாகும்.

இந்த ஆன்மாவை, வேதங்களைக் கற்பதாலோ, நுண்ணறிவினாலோ, கேள்வியறிவினாலோ, வினய ஞானத்தாலோ, ஐம்புலன் கூர்மையினாலோ ஒருக்காலும் அறியவும் முடியாது; அடையவும் முடியாது.

மனத்திற்குள் மெல்ல மெல்ல மெய்யறிவு உதயங்காட்டி, மனதைப் பிரம்மமாக்கவே, மானுடர்க்காக மகான்கள் காலங்கள் தோறும் அவதரித்து வருகிறார்கள்.

மெய்ஞ்ஞானிகள் முன்னிலையில் அமர்ந்து, அவர்களின் ஞான சைதன்ய திருவாக்குகளைச் செவிமடுக்கும் போதுதான், அலையும் மனம் அசையாத சைதன்ய அறிவு வடிவமாகிறது.

அறிவுருவமான மெய்க்குருபிரான் உதவியின்றி, எத்திற வல்லபம் கொண்டவரும், மனதை உள்முகமாகத் திருப்பி நிலைநிறுத்த முடியாது; அடக்கி ஆளவும் முடியாது.

பெரியோர்களின் - ஞானிகளின் அமுத அருள்வாக்குதான் - செவியுணவுதான் - மக்களின் மனமாசுகளைக் களைந்து, செம்மைப்படுத்தி, பரிசுத்தமாக்குகிறது. நினைவை, அறிவுப் பிரகாசமாக - அருட்பெருஞ்சோதி ஆக்குகிறது. அந்த நிலைதான் மனதற்ற பரிசுத்த நிலை. அந்த நிலையைக் கைப்பற்றியவரெல்லாம் மண்ணில் வாழும் தேவர்கள் ஆவார்கள்.

காலங்கள் தோறும் அவதரித்து வரும் மெய்ஞ்ஞானியரைச் சரணடைந்து, சேவை செய்து, காத்து நின்று அவர்கள் அன்பிற்குப் பாத்திரமாகி, பின் சீடராக ஏற்ற பின்னர், அவர்கள் நம்மேல் வைக்கும் பெருங்கருணையினால், பேரிரக்கத்தால் நம் இருதய வீட்டில் ஆன்மாவை நாம் சந்திக்கும்படியாகச் செய்து வைக்கிறார்கள்.

அப்போதுதான் உரை, மனம் கடந்து நிற்கும் ஆன்மா, தத்துவமஸி (நீ அதுவாய் இருக்கிறாய்) என்பதும், அகம் பிரம்மாஸ்மி (நானே பிரம்மம்) என்பதும் தெளிவாகும்.

# கொங்கு நாட்டின் நீதி தேவதை

**அமைவிடம்**

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் என்றும் வற்றாத நதியாம் ஆனைமலை உப்பாற்றின் கரையில் அமர்ந்து மகா சக்தியாக அருள் பாலித்து வரும் அருள்மிகு மாசாணி அம்மன், தன்னை நாடிவரும் பக்தர்களின் குறைகளை நிவர்த்தி செய்து நீதி காக்கும் தெய்வமாக விளங்குகிறாள்.

**அம்மனின் அமைப்பு**

மாசாணி அம்மனின் சிறப்புக்குக் காரணம் மூலவுரு அமைப்பின் தனித்தன்மையே ஆகும். பொதுவாக மற்ற எல்லா திருக்கோயில்களிலும் அம்மன் நின்ற கோலத்தில் அல்லது அமர்ந்த கோலத்தில் இருக்கும். அந்தத் திருவுருவங்கள் சிற்ப சாஸ்திர முறைப்படி வடிவமைக்கப்பட்டவை. ஆனால் மாசாணி அம்மன் தோற்றம் அத்தகையதல்ல. அவள் மயான தேவதையாக மல்லார்ந்து படுத்திருக்கும் கோலத்தில் இருக்கிறாள். இந்த காட்சி வேறு எங்கும் இல்லாத ஒன்றாகும். உப்பாற்றின் கரையில் 17 அடி நீளத்தில் சயன கோலத்தில் அம்மனின் மூல உருவம் அமைந்துள்ளது.

ஆனைமலை, அருள்மிகு மாசாணி அம்மன்





**ஊர் சிறப்பும் வரலாற்று குறிப்பும்**

பழங்காலத்தில் கொங்கு நாடு 24 நாடுகளாக பிரிக்கப்பட்டிருந்தன. கொங்கு நாட்டின் தென்பகுதியான ஆனைமலை நாடும் அவற்றில் ஒன்றாக விளங்கியது. ஆனைமலை சங்க காலந்தொட்டு சிறந்து விளங்கும் புண்ணிய பூமி ஆகும். நன்னன் என்ற மன்னவன் வாழ்ந்த பகுதியாகும். இந்த பகுதியில் காணப்படும் கல்வெட்டுகள் இவ்வூரை நன்னனூர் என்றே காண்பிக்கின்றன. இந்த பகுதியில் யானைகள் அதிகமாக இருந்ததால் ஆனைமலை என்ற பெயர் பெற்றதென்றும் கூறுவர். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் பலயானைச் செல்கெழுகுட்டுவன் உம்பற்காட்டைத் தன் வயப்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த உம்பற்காடு இப்பகுதியாகும். ஆனைமலையின் அடிவாரத்தில் அமையப் பெற்ற ஊருக்கும் அதே பெயர் ஏற்பட்டது. சோழன் பூர்வபட்டயம் என்ற நூல் ஆனை என்கிற இருளன்பதி என்று இவ்விடத்தை சுட்டிக்காட்டுகின்றது. ஆழியாற்றின் கிளை நதியான உப்பாற்றங்கரையில் அமைந்துள்ளது அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்.

**வரலாற்று சான்று**

உம்பற்காடான ஆனைமலையில் நடந்த கதை. இந்த பகுதியை நன்னன் என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். ஆழியாற்றின் கிளை நதியான உப்பாற்றங்கரையில் இருந்த தன் அரசுத் தோட்டத்தில் ஒரு மாமரத்தை வளர்த்து வந்தான். அம்மரத்தின் கிளைகளையோ, காய்களையோ, கனிகளையோ யாரும் பயன்படுத்தக்கூடாது என முரசறைந்து ஆணையிட்டிருந்தான்.

ஒரு நாள் ஆழியாற்றில் தன் ஒத்த இளவயது பெண்களுடன் நீராட வந்த இளம் பெண் ஒருத்தி அந்த மாமரத்தில் இருந்து தானாகவே உதிர்ந்து ஆற்றில் விழுந்த மாங்கனியை உண்டுவிட்டாள். இது தெரிந்த நன்னன் அவளைக் கொலை செய்து விடும்படி உத்தரவிட்டான். அவளது தந்தை அந்தப் பெண்ணின் எடையளவு தங்கத்தால் செய்த பாவை ஒன்றையும் எண்பத்தொரு களிற்றையும் (ஆண் யானைகள்) அந்தப் பெண் அறியாது செய்த தவறுக்காக தண்டம் இழைப்பதாகக் கூறியும் ஏற்கவில்லை. அந்தப் பெண்ணைக் கொலை செய்துவிட்டான்.

கொலை செய்யப்பட்ட அந்தப் பெண்ணை மயானத்தில் சமாதிப்படுத்தி அதன்மீது அந்தப் பெண் போன்ற ஓர் உருவத்தை மயான மண்ணில் அமைத்து வழிபட்டார்கள். மயானத்தில் சயனித்த நிலையில் இருந்த அப்பெண் நாளடைவில் "மாசாணி" என அழைக்கப்பட்டாள்.

பெண் கொலை புரிந்த அந்த நன்னனை கொங்கிளங்கோசர்கள் படையெடுத்து அவனைக் கண்டித்து அவனது காவல் மரமான மாமரத்தையும் வெட்டிவிட்டனர் என்பது வரலாறு.

தமிழ்ப்புலவர்கள் பெண் கொலை புரிந்த நன்னன் மரபினரைக் கூட பிற்காலத்தில் பாட மறுத்துவிட்டனர். இதை பற்றி சங்க் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மண்ணிய சென்ற ஒண்ணுதல் அறிவை
புனல் தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிந்து ஒன்பது களிற்றொடு அவள்நிறை



பொன் செய்பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண் கொலை புரிந்த நன்னன்

- குறுந்தொகை 292

பெயர் தெரியாத இந்த ஆனைமலைப்பெண் பின்னர் கொங்கு நாடு முழுவதும் வழிபடும் தெய்வமாக ஆனாள். நாள்தோறும் பக்தர்கள் இங்கே வந்து இந்த மயான தேவதையை வழிபடுவது வழக்கமாயிற்று.

இத்தகைய சிறப்புப் பொருந்திய ஆனைமலைப் பெண் தெய்வத்தை ஸ்ரீ ராமர் பூஜை செய்து வணங்கி அருள் பெற்றதாக ஒரு கதை நிலவுகிறது. இதன்படி ஸ்ரீ ராமன் 'பொன் மானைத் தேடிப் புறப்பட்ட தாம், தன் பெண் மானான சீதையை ராவணன் கவர்ந்து செல்லக் காரணமான பின், சீதையை தேடிப் புறப்பட்டார். அவ்வாறு தேடிவந்தபோது, உப்பாற்றின் கரையில் இருந்த மயானத்தில் ஓர் அசாதாரணமான அற்புத சக்தி விளங்குவதை அறிந்தார். அங்கிருந்த மேடை மீது அமர்ந்து தியானித்தார். எல்லாம் வல்ல பெருங்கருணை பெருமாட்டியான அம்பிகை பராசக்தி அங்கே

அருட்கோலம் பூண்டு நிலவுவதை அறிந்தார். அந்த மேடை மீது அங்கிருந்த மயான மண்ணைக் கொண்டு, படுத்த கோலத்தில் மண் உருவம் செய்து வழிபட்டார். அருள் பெற்றார். அதன்பின் இலங்கைக்கு தேடிச் சென்றார் என்பது அக்கதை.

தமிழர் திருநாள் தை மாதத்தில் தை பொங்கல் முடிந்த பின் அமாவாசை தொடங்கி அடுத்த 17ம் நாள் நெருப்பினால் குண்டம் வளர்த்து அதில் நடந்து அந்தப் பெண்ணுக்கு செய்த கொடுமைக்காகப் பரிகாரம் தேடினார்கள். கொங்கு நாட்டின் தனிப்பெரும் காவல் தெய்வம் ஆனைமலை மாசாணியம்மனை ஜாதி பேதங்கள் ஏதுமின்றி எல்லா மதத்தவரும் இங்கே வந்த வணங்குவது அற்புதமான காட்சியாகும்.

சக்தி வழிபாட்டிற்கு உகந்த நாட்களான செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும், அமாவாசை நாளிலும் பக்தர்கள் மிகவும் அதிக அளவில் வருகை தருகின்றார்கள். விசேஷ பூஜைகளிலும் விசேஷ நாட்களிலும் பக்தர்கள் கூட்டம் அதிகமாக உள்ளது.

**மிளகாய் அரைத்தல்**

மயானத்தில் வீற்றிருக்கும் மகாசக்தியினை பார்க்கின்ற, வணங்குகின்ற எவரும் பொய் பேச முடியாது. இங்கு அருள் பாலித்துவரும் மகாசக்தி நீதி காக்கும் தேவதையாக விளங்குவதால் இங்கு நீதிக்கல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த நீதிக்கல்லின் மகிமை என்னவென்றால் பில்லி சூனியம் மந்திரம், ஏவல் போன்ற பெரும்பகையால் பாதிக்கப்பட்டவர்களும், பொருட்கள் திருட்டுக் கொடுத்தவர்கள், சூது, வஞ்சனை ஆகியவற்றால் பாதித்தவர்களும் இங்கு உள்ள மிளகாய் அரைக்கும் கல்லில் மிளகாய் அரைத்து நீதிக்கல்லில் பூசி தனக்கு நீதி வேண்டி முறையீடு செய்கிறார்கள். இந்த மிளகாய் அரைத்து நீதி கிடைத்தால் தொண்ணூறாவது நாளில் அம்மனுக்கு நல்லெண்ணையால் எண்ணெய் காப்பு நடத்திட வேண்டும்.

முறையீடு எழுதிக் கட்டுதல் இங்கு நடைபெறும் சிறப்பான வழிபாடாகும். ஒவ்வொருவருக்கும் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எத்தனையோ எதிர்பார்ப்புகள், குறைகள் உள்ளன. அவைகளை இங்கு வழங்கப்படும் சீட்டில் எழுதி கொடுத்தால் அதனை அம்மன் கையில் கட்டிவிடுவார்கள். அந்த வேண்டுதல் நடந்த பின்பு அம்மனுக்கு விசேஷ பூஜை செய்து வருவதும் இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

**உதிரமாலை**

இந்த பெண் தெய்வம் பெண்களின் காவல் தெய்வம். அதனால் பெண்களின் தீராத வயிற்றுவலி, மாதாந்திர துன்பங்கள் நீங்க உதிரமாலை வாங்கி சாத்தினால் நோய் நிவர்த்தியாக பச்சிலை மருந்து தரப்படும். இந்த மருந்தை சாப்பிட்ட பெண்கள் இதனால் பலனடைந்து சந்தோசப்படுவது இந்த அம்மனின் மற்றொரு சிறப்பாகும். குழந்தைப்பேறு இல்லாதவர்கள் அம்பிகையின் திருமுன் வந்து குறிப்பிட்ட வாரங்களுக்கு வேண்டி பச்சிலை மருந்தை உண்டு குழந்தைச் செல்வம் பெற்று, தாயும், சேயுமாக வந்து வழிபாட்டை நிறைவேற்றி செல்வது இக்கோயிலில் மற்றொரு வழக்கமான காட்சியாக உள்ளது.

**ஏனைய சிறப்புகள்**

இத்திருக்கோயிலில் உள்ள மற்றொரு சிறப்பு அம்சம் அம்பாளின் காலடியில் வைத்து பூஜிக்கப்பட்ட கருப்புக் கயிறு பிரசாதமாக வழங்கப்படுவது. அவற்றைக் கையில் கட்டிக் கொண்டால் எந்தத் தீவினையும் வராது என்பது அனைத்து மக்களிடம் நிலவி வரும் நம்பிக்கையாகும்.

**பரிவட்டம் சாத்துதல்**

அம்பாளின் திருவுருவத்திற்கு நாலரை மீட்டர் நீளத்தில் புடவை சாத்துவதும் எலுமிச்சங் கனி மாலை சூட்டி வழிபடுவதும் சிறப்பம்சமாகும்.

தங்களுடைய பிரார்த்தனை நிறைவேறியதும் அம்மனுக்கு எண்ணெய் காப்பு சாத்துதல் முக்கிய பிரார்த்தனையாகும்.

**திருவிழா**

இத்திருக்கோயிலில் நடைபெறும் குண்டம் திருவிழா மிகவும் சிறப்புடையது. ஒவ்வொரு



வருடமும் தை மாதம் அமாவாசை நாளன்று கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகிறது. குண்டம் திருவிழா கொங்கு நாட்டின் பழங்கால நினைவுகளில் குறிப்பிடத்தக்கது.

புதிய கற்கால மக்கள் கால்நடைகள் மேய்த்து வந்தவர்கள் என்பது வரலாற்று உண்மை. அவர்கள் தங்கள் பட்டி போட்டு தங்கியிருக்கும் பகுதியில் கால்நடைகளின் சாணத்தைக் குவித்து வைப்பர். மேய்ச்சல் நிலம் வேண்டி வேறிடத்திற்குப் புறப்பட்டுச் செல்லுமுன் சாணமேட்டினை தீயிட்டு கொளுத்துவார்கள். அவ்வாறு கொளுத்தியபின் அந்தத் தீயில் மக்களும் கால்நடைகளும் நடந்து செல்வர். தீயானது மக்களையும் மாக்களையும் நோயிலிருந்தும் கெட்ட ஆவிகளிடமிருந்தும் பாதுகாக்கும் சக்தி உடையது என்று அக்கால மனிதன் நம்பினான்.

ஆண்டு தோறும் தைத்திங்கள் அமாவாசை அன்று திருவிழா கொடியேற்றப்படுகிறது. கொடியேற்றிய 14ம் நாள் இரவு ஊர்வலமாக மயானக் கரைக்கு சென்று மயான மண்ணினால் அம்மனின் உருவச்சிலை செய்து அதற்கு சக்தி பூஜை செய்யப்படுகின்றது. 15ம் நாள் கங்கணம் கட்டிய பின் திருக்கோயிலில் கும்பஸ்தானம் நடைபெறும். மயானபூஜையில் குண்டத்தில் இறங்கும் ஆண்களும் "பூ" அள்ளி வீசும் பெண்களும் மிகுந்த பக்தியுடன் கலந்து கொள்கிறார்கள். 16ம் நாள் திருத்தேர் வடம் பிடித்து நகரை வலம் வருவர். அன்று இரவு அக்னிக்குண்டம் வளர்க்கப்படுகிறது.

17ம் நாள் காலையில் பக்தர்கள் குண்டத்தில் இறங்குவார்கள். 18ம் நாள் அம்மனுக்கு திருமஞ்சன நீராட்டு விழா நடைபெறும். அன்று இரவு மகாமுனியப்பன் பூஜையுடன் குண்டம் திருவிழா நிறைவுறும். இவ்வாறு 18 நாட்கள் குண்டம் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. இவ்விழா கொங்கு நாட்டின் புகழ்மிக்க திருவிழாவாக பெருந்திருவிழாவாக விளங்குகின்றது.

தினசரி வழிபாட்டுக் காலங்கள்

காலை 6.00 மணி - சன்னதி திறப்பு
காலை 6.30 மணி - அபிசேக பூசை அலங்காரம்
மதியம் 11.30 மணி - உச்சிகால பூசை
மாலை 4.00 மணி - அபிசேக பூசை
மாலை 6.30 மணி - சாயங்கால பூசை
இரவு 8.00 மணி - சன்னதி திருக்காப்பு

பிரதி மாதம் அமாவாசை தினத்திற்கு முன்தினம் இரவு முழுவதும் திருக்கோயில் திறந்திருக்கும்.

**திருக்கோயிலில் தற்போது நடைபெற்று வரும் திருப்பணிகள்**

இராஜகோபுரத் திருப்பணி - ரூ. 50 இலட்சம்
தங்கரத திருப்பணி - ரூ. 72 இலட்சம்
சுற்றுப்பிரகார மண்டபம் மற்றும் அலுவலக கட்டிடம் - ரூ. 50 இலட்சம்

ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறை - ரூ. 4.50 இலட்சம்

நன்கொடையை ரொக்கமாகவோ, நேரிலோ, கேட்பு வரைவோலையாகவோ செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம். கேட்பு வரைவோலையை THE EXECUTIVE OFFICER, ARULMIGU MASANIAMMAN TEMPLE, ANAIMALAI என்ற முகவரிக்கு அனுப்பிடக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

*



சிறப்பாசியர் மற்றும் வெளியிடுவோர் : த. பிச்சாண்டி, இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்
இந்து சமய அறநிலையத் துறை, சென்னை – 600 034.
தொலைபேசி எண்: 28334811/ 12/ 13
ஆசிரியர் (கூ.பொ) : ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி. , பி.எல்., துணை ஆணையர்
அச்சிடுவோர் : சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட். , சென்னை – 86
தொலைபேசி : 23450920 / 28117575



சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் தெப்பத்திருவிழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தனது துணைவியாருடன் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் டாக்டர் நல்லி என். குப்புசாமி செட்டியார், அறங்காவலர்கள் மற்றும் துணை ஆணையர் / செயல் அலுவலர்.





காஞ்சிபுரம், குமரக்கோட்டம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 27-1-2008 அன்று நடைபெற்ற குடமுழுக்கு விழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு.த. பிச்சாண்டி., இ.ஆ.ப. அவர்கள், குமரக்கோட்டம் முருகன் வழிபாட்டு மன்ற தலைவர் திரு. வ. கந்தசாமி, மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் திரு. சன்பிராண்ட் கி. ஆறுமுகம் மற்றும் திரு. பி.எம்.குமார் ஆகியோர்...

பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08

# அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை



## பொள்ளாச்சிவட்டம், கோவை மாவட்டம்,

## குண்டம் திருவிழா - 2008-ம் ஆண்டு நிகழ்ச்சி நிரல்

கொங்கு நாட்டின் மிகச்சிறந்த வழிபாட்டுத்தலமான இத்திருக்கோயிலின் குண்டம் திருவிழா 06.02.2008 முதல் 24.02.2008 வரை கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| 06.02.2008 தை 23 | புதன்கிழமை<br>காலை 9.00 மணிக்கு மேல் | கொடியேற்றம் |
| 19.02.2008 மாசி 7 | செவ்வாய்கிழமை<br>இரவு 2.00 மணிக்கு மேல் | மயானபூஜை |
| 20.02.2008 மாசி 8 | புதன்கிழமை<br>காலை 7.00 மணிக்கு | சக்தி கும்பஸ்தாபனம் |
| 20.02.2008 மாசி 8 | புதன்கிழமை<br>மாலை 6.30 மணிக்கு | மகாபூஜை |
| 21.02.2008 மாசி 9 | வியாழக்கிழமை<br>காலை 10.30 மணிக்கு மேல் | குண்டம் கட்டுதல் |
| 21.02.2008 மாசி 9 | வியாழக்கிழமை<br>இரவு 7.00 மணிக்கு | தேர் வடம் பிடித்தல் |
| 21.02.2008 மாசி 9 | வியாழக்கிழமை<br>இரவு 9.00 மணிக்கு | குண்டம் பூ வளர்த்தல் |
| 22.02.2008 மாசி 10 | வெள்ளிக்கிழமை<br>காலை 8.00 மணி | குண்டம் இறங்குதல் |
| 23.02.2008மாசி 11 | சனிக்கிழமை<br>காலை 8.00 மணிக்கு மேல் | கொடி இறக்குதல் |
| 23.02.2008 மாசி 11 | சனிக்கிழமை<br>காலை 10.00 மணி | மஞ்சள் நீராடல் |
| 23.02.2008 மாசி 11 | சனிக்கிழமை<br>இரவு 8.00 மணி | மகாமுனி பூஜை |
| 24.02.2008 மாசி 12 | ஞாயிற்றுக்கிழமை<br>காலை 11.00 மணி | மகா அபிஷேகம் |

அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு அம்பாளின் அருளுக்கு பாத்திரராகும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

ப.கனகசபாபதி எம்.ஏ.,பி.எல்.,
செயல் அலுவலர்.
ஆ.துரைசாமி
கண்காணிப்பாளர்.

டி.ராஜ்குமார் - தலைவர், அறங்காவலர் குழு.
துரைகிருஷ்ணராஜ் - அறங்காவலர்
ப.ஈசுவரமூர்த்தி - அறங்காவலர்
தனலட்சுமிசம்பத்குமார் - அறங்காவலர்.
சு.மருதமுத்து - அறங்காவலர்.